www.akaram.eu

# AKARAM
# அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 8.1 திருவள்ளுவர் ஆண்டு 2051 | 14.05.2019 - 13.06.2019 | ISSN : 2195-6480



FREE Magazine

9 ஆம் ஆண்டில் கால் பதிக்கும்...

# 'பிரபாகரனியம்'
## குறித்த ஒரு தத்துவப் புரிதல்

FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA

## வெகு விரைவில்...

TKS BEST FOODS




ஜேர்மனி

TKS BEST FOODS

நிறுவனத்தின்
புதிய கிளை
**DOTMUND**
நகரில் ஆரம்பம்

கடல் உணவுகள் அனைத்தும் வகை வகையாக.
தொகையாகச் சில்லறையாக மிக மலிவாகக்
கொள்முதல் செய்திட வரவேற்கிறது

# TKS BEST FOODS

தமிழ் மக்கள் விரும்பும் மீன் - றால்- நண்டு - கணவாய்
என்பன எப்பொழுதும் வாங்கிடலாம்!

**வாருங்கள்! பாருங்கள்!! வாங்குங்கள்!!!**

**TKS BEST FOODS** | 0049 231 950 468 83 | 0049 231 950 468 82
Rheinische Str. 79, 44137, Dortmund Germany

tksbestfoods | tks-bestfoods@web.de | www.tks-bestfoods.de

# DER VERBESSERTE SUPER-TARIF

ortel MOBILE







**19,99€**[15) ] /4 Wochen

## ஒரே சிம்மில் இருந்து...
## யேர்மனிக்கு முற்றிலும்
# இலவசம்


**NEU: Deutschland Flat**

ஐரோப்பா, இந்தியா
மேலும் பல நாடுகளுக்கு
250 நிமிடங்கள்

## 4GB Internet

- 250 Minuten aus Deutschland in 50 weitere Länder
- Internet Flat ~~3 GB~~ 4 GB
- Surfen&Telefonieren in der EU
- Deutschland Flat

**ஐரோப்பிய நாடுகளில் இருந்து பயன்படுத்தலாம்**
**4GB முடிந்தால் மீண்டும் 9 யூரோக்களுக்கு பெற முடியும்**




www.ortelmobile.de Ortel. In über 220 Länder sprechen. Powered by e·plus+



AKARAM
அகரம்
மாதாந்த இதழ் Monthly Magazine
14.வைகாசி 2019 13 - ஆணி 2019
சுவடி / ISSUE 8.1

**தலைமை ஆசிரியர்**
திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**
திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்ணை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)

**நிழற்படப் பிரிவு**
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**
திரு. அர்ஜுன் (ஜெர்மனி)

**தொடர்புகளுக்கு**
European Tamils Union e.V.
PO. BOX 4153, 59037 Hamm
Germany
Tel: 00 49 176 47 11 87 11
Email: editor@akaram.eu

ISSN 2195-6480
www.akaram.eu

No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.
©ETU e.V. 2014.
All rights reserved.

# நுழைவாயில்...

**அகரம் வாசக அன்பர்களுக்கும்,**
**விளம்பரதார வள்ளல் பெருமக்களுக்கும்**
**எமது நன்றியும், வணக்கமும்....**

உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம் பெற்ற, கத்தோலிக்கத் தமிழ் மக்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட முஸ்லிம் தீவிர வாதிகளின் தொடர் குண்டு வெடிப்புகளைத் தமிழ் மக்கள் சரியான முறையில் அடையாளம் கண்டு, தமிழ் மக்களின் அரசியல் வழி முறைகளைத் திட்டமிட வேண்டிய கட்டாயத்தில் ஈழத் தமிழ் இனம் உள்ளது.

இலங்கை அரசு ஐ.நா.வின் சர்வதேச அகதிகளின் முகாமை நீர் கொழும்பில் இருந்து தமிழர் பிரதேசமான வவுனியாவில் வைத்துப் பராமரிப்பதற்கான ஏற்பாட்டை ஐ.நா. அகதிகள் ஆணையம் செய்திருப்பதை, தமிழ் மக்கள் மிக வன்மையாக எதிர்க்க வேண்டிய நியாயப்பாடுகளை, தமிழர் தலைமை கருத்தில் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை.

“முயல் பிடிக்கும் நாய்களை மூஞ்சியிலே தெரியும்” என்பார்கள். அந்த வகையில் தமிழர் தலைமை இதுவரை ஒரு மூஞ்சூறைக் கூடப் பிடித்த வரலாறு இல்லாத நிலையில், தமிழ்மக்கள் இனிமேலும் இவர்களை நம்பி நல்லது நடக்கும் எனச் சும்மா விட்டுவிட முடியாது.

**தமிழ் இனத்தின் விடுதலைப் போராட்ட இயக்கமான விடுதலைப் புலிகளை அழித்து, தமிழ் இனப் படுகொலைகளுக்கும், சிங்கள அரசுகளுக்கு ஆதரவாகவும் செயற் பட்ட முஸ்லீம் மக்களை, தமிழ் மக்கள் இனிமேலும் நம்பமுடியுமா? என்கிற கேள்விகளுக்கு தமிழினம் விடை தேடிக் கொண்டிருந்த வேளையில், இந்தத் தொடர் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப் பட்டுள்ளன.**

இந்தத் தாக்குதல்களில் வெளி நாட்டு அரசுகளின் சதிகளை மறுப்பதற்கு இல்லை என்றாலும், அதனைச் சாட்டாக வைத்து முஸ்லிம் சமூகம் தனது பொறுப்புகளைத் தட்டிக் கழிப்பதை பாதிக்கப்பட்ட இனமாகிய ஈழத் தமிழ் இனம் மீண்டும் ஒரு முறை நம்பி ஏமாறும் என யாரும் எதிர்பார்க்கக் கூடாது.

**ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில், இஸ்ரவேலின் உளவு அமைப்பான மோசாட் அமைப்பின் ஆதரவோடு செயற்பட்ட முஸ்லீம் ஊர் காவல் படை, சத்துருக் கொண்டானில் நடத்திய தமிழ் மக்கள் படுகொலைகளை தமிழ் இனம் மறந்து விட முடியாது.**

எல்லாவற்றுக்கும் மேலாக காத்தான் குடியில் ஒரு அரபு நாடு உருவாகி விட்டதை, எமது கட்டுரையாளர் மனோவின் கட்டுரை தெரிவிக்கிறது. இது அதிக ஆபத்தானதும், தமிழரின் தாயகக் கோட்பாட்டை வேரோடு தகர்க்கும் செயற்பாடு என்பதை எவரும் மறுக்க முடியாது. அதனால் அத்தகைய முயற்சிகளை நாம் என்ன விலை கொடுத்தேனும் முறியடிக்க வேண்டும்.

இத்தகைய பின் புலத்தில் 2019 ஐ.எஸ்.ஐஎஸ். இலங்கை அமைப்பின் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களை நாம் எப்படிச் சும்மா விட்டு விடமுடியும்? என்பதை நல்ல தமிழ் முஸ்லிம் நண்பர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**அதே போன்று தமிழ் இனப் படுகொலைகளை அனுமதித்தும், கண் மூடியும் எதுவும் செய்யாமல் இருந்த பாவத்தைச் செய்த ஐ.நா., சிங்களம் வாக்களித்த எந்த ஒரு நடவடிக்கையையும் தட்டிக் கழித்து வரும் நிலையில், இலங்கை அரசின் சர்வ தேச அகதிகளைப் பாதுகாக்கும் பொறுப்பை, தமிழர் பிரதேசத்தில் ஒப்படைக்கும் தார்மீகத்தை எவரிடம் இருந்து, எப்படிப் பெற்றுக் கொண்டது?**

தமிழினத்துக்கு அவசியமான சர்வதேச விசாரணை மற்றும் போர் இழப்பு நிவாரணங்களைக் கடந்த 10 வருடங்களாக வழங்க முன்வராத ஐ.நா., இன்று எந்த முகத்துடன் சர்வ தேச அகதிகளின் பாதுகாப்பை தமிழரிடம் ஒப்படைக்க முன்வருகிறது என்பதை அறிந்து கொள்ள முடியவில்லை? தமிழர் நிலமும், அதன் மக்களும் சிங்கள இராணுவத்தின் தயவில் இருக்கும் பொழுது, ஐ.நா.அகதிகள் ஆணையம் யாரை நம்பி இப்பொறுப்பை தமிழர் தரப்பிடம் ஒப்படைத்து, தனது கடமையைத் தட்டிக் கழிக்க முற்படுகிறது?

**அது இலங்கை அரசை நம்புகிறது என்றால், அந்த அகதிகளை ஏன் தெற்கிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும்? இந்த விளையாட்டை இனிமேலும் தமிழரோடு வைத்துக் கொள்வதாக இருந்தால், ஐ.நா. இந்தப் பிரச்சினையை பாதுகாப்புச் சபையிடம் ஒப்படைத்து, எமக்கு நிலையான பாதுகாப்பும், அமைதியும் தரவல்ல தனித் தமிழ் ஈழ தாயகத் தேசத்தை மீட்டுத் தரும் வழியைத் தேட வேண்டும்.**

தாயகத்திலும், புலம் பெயர் தேசங்களிலும் உள்ள தமிழர் அரசியல் செயற்பாட்டாளர்கள் தமது அரசியல் நடவடிக்கைகளை துரிதப்படுத்தி, காத்தான் குடி போன்ற குட்டி நாடுகள் தமிழர் தாயகத்தில் பிரசவமாவதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

**தீவிரவாதம் வெளியில் மட்டும் அல்ல! அகரம் இதழுக்கு ஆதரவு தர மறுப்பதும், அகரத்தின் விளம்பர கணக்குகளை இழுத்தடிப்பதும், ஒரு வகையில் அகரம் செயற்பாடுகளை முறியடிக்கும் அரச தீவிரவாத்தை ஆதரிக்கும் செயற்பாடுகளே! என்பதை நினைவுபடுத்தி விடை பெறும்....**

**ஆசிரியர், அகரம் குழுமம்**






GGS
FOOD SERVICE
CONTACT
R.P. PARAMESH
02305 93 73 75
017 93 91 607

# அங்கே எவன்டா பட்டாசு போட்டது?



**ஏசுபிரான் உயிர்த்த ஞாயிறு, எப்படி தமிழ் மக்கள் படுகொலை ஞாயிறு ஆனது? இலங்கைத் தமிழர் இஸ்லாமியத் தமிழர்களை நிரந்தரமாக பிரிக்கும் சதி?**

கொளுத்திப் போட்டவனும், கொளுத்த வைச்சவனும் கோழித் திருடர் போல தேடித் திரிகிறார்கள். "கண்டவர் விண்டதில்லை, விண்டவர் கண்டதில்லை" என்கிற சைவ, சமய ஆன்மீகத் தேடல்தான் அங்கும் நடக்கிறது. அதாவது கண்டவர்களும் சொல்லவில்லை, சொன்னவர்களும் காணவில்லை. இன்னும் பச்சையாகச் சொன்னால், "உனக்கும் பெப்பே, உன் அப்பனுக்கும் பெப்பே" என்பது போல நாட்டு மக்களை ஏமாற்றி வருகிறார்கள்.

லங்கா ஜமாத் அமைப்பைப் பற்றி 2014 முதலே அரச தரப்புக்கு செய்திகளும், முறைப்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. அரச ரீதியாக இந்தியாவும், அமெரிக்காவும் இலங்கை அரசை எச்சரித்திருந்தன. இலங்கை அரச அதிபர் மைத்திரிபாலா, தமக்கு இவை பற்றித் தெரியாது அல்லது பாதுகாப்பு அமைச்சு எதனையும் தெரிவிக்க வில்லை எனத் திரும்பத் திருப்பக் கூறி, மக்களை நம்ப வைக்க முயல்கிறார்.

இவற்றின் மூலம் தன்னை அப்பாவி ஆக்க முற்பாட்டாலும், இலங்கையின் அச்சு மற்றும் எலத்திரனியல் ஊடகங்கள், நாட்டு மக்கள், சிங்கள மக்கள் உட்பட நம்பத் தயாராக இல்லை. அமெரிக்க இந்திய அரசுகளின் செயற்பாடுகளும், அறிக்கைகளும் உண்மைகள் என நம்பும் படியாக இல்லை. எல்லாமே ஒரு பாரிய உள்நோக்கம் கொண்ட சதியாகவே காணப்படுகின்றன.



**த. எதிர்மன்னசிங்கம்**

**மைத்திரி திட்டமிட்டே சிங்கப்பூர் பயணத்தை மேற்கொண்டார் என்பதும், இலங்கைத் தாக்குதல் பற்றிச் சிங்கப்பூரில் காலை 10.00க்கு அறிவிக்கப் பட்டது எனவும் கூறுகிறார். அப்படியானால் அது கொழும்பு நேரப்படி காலை 07.30 மணி. குண்டுத் தாக்குதல்கள் காலை 08.30 முதல், காலை 09.00 மணிக்கு இடையில் நடை பெற்ற பொழுது, தடுப்பதற்கு 1 மணி நேர அவகாசம் இருந்துள்ளது. நாட்டின் முப்படைகளின் தளபதியான மைத்திரி என்ன செய்தார்? என்ன செய்திருக்க வேண்டும்?**

இல்லை அவர் கருதுவது இலங்கை நேரப்படி காலை 10.00 என்றாலும் கூட, நாட்டை உலுக்கும் குண்டு வெடிப்புகள் நிகழ்ந்து 11 மணி நேரம் கழிந்த பின்னர்தான் தெரிவிக்கப் பட்டது என்றால்? அதுவும் கூட கேள்விக்கு உள்ளாக்கப் படவேண்டியதே!. முதலாவது சரி என்றால்? அது ஒரு பாரதூரமான கடமையில் தவறிய குற்றமாகும். இரண்டாவது காரணம்தான் சரி என்றால்? அது ஒரு ஆபத்தான தொடர்புக்குள்ளான குற்றமாகும்.

**இந்தப் பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பாக ஜனாதிபதிக்கும், பாதுகாப்புத் துறை மற்றும் நிர்வாகத் துறை அதிகாரிகளுக்கும் இடையில் இடம் பெற்ற தொலைபேசி உரையாடல்கள் பரசீலிக்கப்பட்டு, உண்மைகள் வெளிக் கொணர வேண்டும் என, பெயர் வெளியிட விரும்பாத பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் ஊடகத்துக்கு கூறி உள்ளார்.**

இப்பொழுது தேசிய நலன்களை ஆபத்துக்கு உள்ளாக்கும் சக்திகள் ஊடுருவி விட்டனவா? என்கிற கேள்வியை எழுப்பும் வகையில் தெரிவு செய்யப்பட்ட, மிக முக்கியமான பாதுகாப்பு அலைபேசி உரையாடல் பதிவுகளை வெளியிடுகிறார்கள். அதனால் அவர்களால் அலைபேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்கும் புதிய கருவிகள் பயன்படுத்தப் படுகின்றனவா? அப்படி என்றால் அது மிகவும் ஆபத்தானது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

அமைச்சர் அவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன கூறுகிறார், "தேசிய தவ்ஹீத் ஜமாத் குண்டுத் தாக்குதல் தொடர்பான இரகசிய உளவுத் துறைகளின் எச்சரிக்கைகளை, பாதுகாப்புப் பிரிவுகள் புறக்கணித்து விட்டன. அந்த அமைப்பின் உறுப்பினர்கள் குறைந்தது 26 பேர் இலங்கை புலனாய்வுப் பிரிவின் ஊதியத்தைப் பெற்றுள்ளனர்" என்கிறார். இலங்கை இராணுவத்தின் முன்னாள் அதிகாரியான ஆமி மொகிதீன் எனப்படும் பத்ருதீன் மொகமட் அவர்களுக்கு பயிற்சிகள் வழங்கியதாக இப்பொழுது இவரை காவல்துறை தேடி வருகிறதாம்.

(அவர் எந்த இராணுவ முகாமில், எவருடைய பாதுகாப்பில் ஒளிந்திருக்கிறாரோ? அவரை எந்தக் காவல் துறை, எந்த இராணுவ முகாம்களுக்குள் தேடிப் பிடிப்பது? அப்படியானால் கோழியும், குரக்கனும், இலங்கை அரசுக்கும்;, புலனாய்வுத் துறைக்குமே சொந்தம்.)

### தமிழ்தேசியக் கூட்டமைப்பு ஏன் மௌனம்?

பெரிய இடத்துச் சமாச்சாரம் சும்மாவே சொல்லி விட முடியுமா? 2015 ஜனவரியில் அண்டா குண்டா அடகு வைத்து, கடனை உடனை வாங்கி, மைத்திரியை அதிபராகவும், ரணிலை பிரதமராகவும் இந்தியாவும், அமெரிக்காவும் சிங்கப்பூரில் நாத்து


அகரம்
விளம்பரத் தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11


உங்கள் அனைத்து
வாகனத் தேவைகளுக்கான
ஒரே இடம்
044 803 47 47
078 300 90 90
Airport Transfer
VIP Service
Limousine
Reisebusse
Kleinbusse
Gruppen-Transfer
SWISS RENT A CAR
SRAC
Swiss Rent a Car GmbH
Schaffhauserstrasse 137
8302 Kloten
www.swissrentacar.ch
அனைத்து வாகனத் திருத்த
வேலைகளுக்குமான ஒரே இடம்
Reifenwechsel
Auto Diagnostik
Karosserie
Klimaservice
MFK Bereitstellung
Bremse und Stossstange
Autoradio Montage
Reinigung und Polieren
Sonstige Reparaturen
Ersatzwagen
KGS
Gaswerkstrasse 8, 8952 Schlieren
044 500 01 02



அமைச்சர் அவைப் பேச்சாளர்
ராஜித சேனாரத்ன

மேடை போட்டு, ஜனநாயகப் புரட்சி என்று இலங்கையில் நட்டு வைத்த நல்லாட்சி நாட்டு, மக்களுக்கான ஆட்சி எனக் கூவிக் கூவி திரிந்தவர்களில் எல்லாரையும் விட அதிகம் கூவினது, சம்பந்தனும், சுமந்திரனும்தான்.

அவர்களுக்கு கூவியதற்குக் கூலிகளாகக் கிடைத்தவை எதிர்க் கட்சித் தலைவர் பதவியும், ஜனாதிபதியின் ஆலோசகர் பதவிகளும்தான். பக்கப் பாட்டுப் பாடிய பேர்களுக்கு, ஆளுக்கொரு ரொயோட்டா சொகுசு காரும், மாதாந்தம் பகட்டான வாழ்வும், தொகுதிக்கு வழங்கப்படும் அரச நிதிகளும் போதாதா?

மக்கள் எக்கேடு கெட்டாலும் எமக்கென்ன? என்கிற மனநிலையில் தமிழர் பிரதிநிதிகள். வெறும் கண்டன அறிக்கையோடு சரி, தமிழ் மக்களோடு பாக்கிஸ்தானிய முஸ்லிம்கள் உள்ளிட்ட சர்வதேச அகதிகளை, ஐ.நா தமிழர் பிரதேசத்தில் வைத்துப் பராமரிப்பதை எப்படி இவர்களால் சம்மதிக்க முடிகிறது? அவர்களால் உருவான நல்லாட்சி, தமிழ் மக்களுக்கு இதுவரை என்ன நன்மை கிடைத்தது?

ஆனால், முஸ்லிம் தலைவர்கள் அமைச்சுப் பதவிகளும், மாகாண ஆளுநர் பதவிகளும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்கின்றனர். அவை எல்லாம் பெரிசாக நினைத்தால், அவற்றை விடப் பெரிய சமாச்சாரம் தமிழ் - முஸ்லிம் உறவை வேரோடு அழித்து விடுவதுதான். கிழக்கு மாகாணத்தில் இஸ்ரேலிய உளவு அமைப்பின் மூலம் உருவாக்கப்பட்ட முஸ்லீம்கள் மட்டுமே அடங்கிய ஊர்காவல் படை, தமிழ் மக்களை 1980களில் கொன்று குவித்தது.

அதன் எதிர்வினையாக யாழ் முஸ்லிம்களைப் புலிகள் வெளியேற்றி, யாழ்ப்பாண மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியதாயிற்று. கிழக்கிலே முஸ்லிம் ஊர்காவல் படை நடத்திய தமிழ் கொலைகளை விட, அதிகமாக இன்றும் பேசப்படுவது யாழ் முஸ்லிம்களின் வெளியேற்றம்தான். ஏனென்றால், அதனை தமிழீழ விடுதலைப் புலிகள் செய்தனர், தமிழ் மக்கள் தடுக்காது விட்டனர். எனவே, புலிகளும், தமிழ் மக்களும் முஸ்லிம்களின் எதிரிகள், பயங்கரவாதிகள் என்கிற பிரச்சாரத்துக்கு இவர்களின் பதில் என்ன?

**அன்று உருவாக்கப்பட்ட பிரிவினை வாதம் இன்று 2019ல் ஐ.எஸ்.ஐ. என்கிற பெயரால், தேசிய தவ்ஹீத் ஜமாத் என்கிற கிழக்கு முஸ்லிம்களை கொண்ட அமைப்பு கொழும்பிலும், கிழக்கிலும் உயிர்த்த ஞாயிறு பிரார்த்தனை வேளையில், கிருஸ்துவ தமிழ் மக்களைக் குறி வைத்து, தற்கொலைக் குண்டு தாக்குதலை நடத்திப் பாரிய உயிர் அழிப்புகளை ஏற்படுத்தி உள்ளது. இப்படித்தான் அர்த்தப்படும் விதத்தில் அரசின் நடவடிக்கைகள் அரங்கேற வழி ஏற்படுத்தப்படுகிறது.**

## கோட்டபாயாவின் கனவும், அமெரிக்காவும்

இந்த அமைப்பு பற்றிய அனைத்துத் தகவல்களும் 2014 பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டபாய ராஜபக்சவுக்கு, நேரடியாக முறைப்பாடு செய்யப்பட்டதற்கு நிறைய ஆதாரங்கள் வெளியாகி உள்ளன. கைது செய்யப்பட்டுள்ள அப்துல் ராசிக் என்பவர், தவ்ஹீத் ஜமாத் அமைப்பின் உறுப்பினர் என்பதும், அவர் இலங்கை புலனாய்வுப் பிரிவிடம் ஊதியம் பெறுபவர் என்றும், அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்னவின் கூற்றுப்படி, இந்த அமைப்பின் பின்னால் கோட்ட பாயாவின் கவனமும், கரங்களும் இருந்ததை யாரும் மறுக்க முடியாது.

முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகளை நடத்தும் பொது பல சேனாவின் பின்புலத்திலும் கோட்டபாயாவே இருந்து வருகிறார். முஸ்லிம் மக்களுக்கிடையே பகைமையை



உருவாக்க, அவர்களுக்கு எதிரான தாக்குதல்களை நடத்தி பிள்ளையைக் கிள்ள, பொது பல சேனாவும் அதற்கு எதிர் வினையாக தொட்டிலை ஆட்ட, தவ்ஹீத் ஜமாவும் கோட்டாவின் பின்னணி தெளிவாக்குகிறது.

## ஜனாதிபதிக் கனவில் மிதக்கும் கோட்டா

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தர் அணி சார்பாக கோட்டபாயா போட்டி இடுவார் என்பது, ஏறக்குறைய உறுதியாகி விட்டதாக செய்திகள் குறிப்பிடுகின்றன. அவரது கனவுக்குத் தடையாக இருப்பது அவரது அமெரிக்க குடி உரிமை எனவும், அதனைத் துறக்க அமெரிக்கச் சட்டத்தில் இடம் இல்லை எனவும் கூறப்படுகிறது. எனவே, தமது செல்வாக்கை பயன் படுத்தி அமெரிக்க அரசே அவரது குடி உரிமையை பறிக்கும் செயற்பாடுகளில் கோட்டபாயா ஈடுபட்டுள்ளார் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால், சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரம துங்க படு கொலையில் கோட்டாவின் வகிபாகம் உள்ளது எனவும், அது தொடர்பாக லசந்தவின் மகள் அவருக்கு எதிராகத் தொடுத்துள்ள வழக்கு, அமெரிக்க நீதிமன்றத்தில் இருப்பதால் அவரது குடி உரிமை உடனடியாக நீக்கப்படும் சாத்தியம் இல்லை.

அதே போன்று கோத்தாவுக்கு எதிராக மனித உரிமை தடுத்து வைத்தல், துன்புறுத்தல், குற்றங்கள் தொடர்பான வழக்கும் அமெரிக்க நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்தத் தடைகளை வெட்டி, அவர் இலங்கை அரச அதிபர் தேர்தலில் போட்டி இட்டு, வெற்றி காண திட்டம் இட்டுள்ளார்.

அதற்கான முன்னேற்பாடுகள்தான் சிங்கள பொது பலசேனாவின் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள். அந்த அமைப்பின் பின்னால் கோட்டா இருப்பது என்றோ தெரிந்த விடயம். ஆனால், உயிர்த்த ஞாயிறு படுகொலைகளை நடத்திய தேசிய தவ்ஹீத் ஜமாத் அமைப்பும், கோட்டாவின் தத்துப் பிள்ளைதான் என்கிற விடயம் இப்போது தெரிய வந்துள்ளது.

இந்த இரட்டை வேடம் எதற்காக? என்கிற விடயம், ஏன்? என்கிற கேள்வி எழுகிறது. சென்ற ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தர் தரப்பை பழி வாங்கியவர்கள் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களின் ஒருமித்த வாக்குப் பலம் என்பது உறுதியாக வெளிப்பட்டது. இந்த உறவை முறித்தால் மட்டுமே மகிந்தர் குடும்பம், அதிகாரத்தில் நிலைக்க முடியும். இந்தக் கனவை நனவாக்க தமிழ் முஸ்லிம் பிரிவினை நிரந்தரமாக தேவை.

இலங்கையின் பாதுகாப்புக்கு கோட்டா போன்ற இரும்பு மனிதன் தான் வேண்டும் எனக் கூறிவருகிறார், இலங்கையின் முன்னாள் அமெரிக்கத் தூதரும், அமெரிக்க அரசின் முக்கிய மனிதருமான றொபேட் ஓ பிளேக்.

சிங்கள மக்கள் தாக்கப்பட்டால், எதிர்வினை பாரதூரமாகவும், அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியாமலும் போய் விடும். மேலும் ஜனாதிபதித் தேர்தலும், மாகாண



வாடிக்கையாளர்களின் பேராதரவுடன்
17ஆம் ஆண்டில்....
SK
SINCE 2003
S.K. Silks &
Gold Paradise
மங்கையர் மனதை
கொள்ளைக் கொள்ளும்
பட்டுச் சேலைகள் யுற்ரொப்ஸ், சிமோக்,
லேஸ், நெற்ஸ், லேசர் ரிசு சேலைகள்,
அனார்கலி பட்டியாலா பஞ்சாபிகள்,
பாவாடைத் தாவணிகள்,
காகிறாச் சோலிகளுடன்
ஆடவர்கள், சிறுவர், சிறுமியர்களுக்கான
ரெடிமேட் ஆடைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்
யாரும் கண்டிராத
மலிவு விலையில்
இந்த வருடத்தின் புத்தாடைகள்
வாங்கிட எம்மை நாடவும்...
மாபெரும்
ராஜ
முத்திரை
ADLER STR. 33, 44137 DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648

GENERALI



**Mathan Selvaratnam**
**Versicherungs - und Vorsorgeberater**

Monbijoustrasse 29, 3001 Bern
058 473 24 45    058 473 32 29
email : mathan.selvaratnam@generali.com
www.generali.ch

www.generali.ch    076 / 303 22 16

## PRIVATKUNDEN & FIRMENKUNDEN | தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிற்கும்

### வருமானக்காப்புறுதி
**EINKOMMENS - VERSICHERUNGEN**

வேலை இழக்க நேரிட்டால் உங்கள் 100% வருமானத்தையும் பெற்றுக்கொள்ள இலகுவழி

### சேமிப்புக்காப்புறுதி
**SPARVERSICHERUNGEN**

சிறுவர்கள் முதல் பெரியர்கள் வரை அனைவருக்குமானது

### ஆயுட்காப்புறுதி
**LEBENSVERSICHERUNGEN**

உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாத்திட

### வாகனக்காப்புறுதி
**FAHRZEUGEVERSICHERUNGEN**

உங்கள் வாகனத்திற்கு தேவையான அனைத்து காப்புறுதிகளும்

### வீட்டுக்காப்புறுதி
**HAUSRAT, GEBÄUDE & HAFTPFLICHTVERSICHERUNGEN**

சொந்த, வாடகை வீடுகளிற்கு அவசியமான காப்புறுதி

### சட்டக்காப்புறுதி
**RECHTSSCHUTZVERSICHERUNG**

ஒவ்வொரு சட்டம் சார்ந்த தேவைகளிற்கும் அவசியமானது

### மருத்துவக்காப்புறுதி
**KRANKEN & UNFALLVERSICHRUNGEN**

அனைத்து விதமான மருத்தவ சேவைகளிற்கும் தேவையான சிறந்த காப்புறுதி

### வீட்டுக்கடன்
**HYPOTHEKEN**

உங்கள் சொந்த வீட்டுக்கனவை நனவாக்கிட சிறந்த சேவை

எம்முடன் தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளை இலவசமாக பெற்றுக்கொள்ளவும்



சுவிஸ் நாட்டில் அனைத்தின மக்களினதும் நம்பிக்கைக்குரியதும் இலாபம் தரவல்லதும் எமது நிறுவனம்



சபைகளின் தேர்தல்களும் நடக்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் கோட்டபாயாவே இறங்குவார். வெற்றியும் பெற வேண்டும் என்ற கட்டாயம் உள்ளது.

### சீனாவை நோக்கி இந்தியாவா?

வழக்கம் போல இலங்கை அரசியலில் தமிழ் மக்களே பலிக் கடாக்களாக்கும் சம்பிரதாயம் உலகம் அறிந்ததே!. ஏன்? என்று எதிர்த்துக் கேட்க, அப்பன் இல்லாத பிள்ளையை எல்லாரும் அடிப்பது போல, இந்தத் தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது.

இலவச இணைப்புப் போல, மூன்று 5 நட்சத்திர விடுதிகள் தாக்கப் பட்டுள்ளன. அதில் ஒன்று மட்டுமே வெளிநாட்டவருக்குரியது. சங்கிரிலா சீனருக்குச் சொந்தமாம். அதற்கு அருகில் உள்ள கலதாரி, தாஜ் போன்றவை இந்தியருக்கு உரிய ஹோட்டல்கள், தீண்டப்படவும் இல்லை. அதே வரிசையில் உள்ள காலி முக, ஹில்டன், றமடா போன்ற 6, 7, நட்சத்திர விடுதிகளும் தப்ப விடப்பட்டிருந்தன. தாக்குதல் நடத்தப்பட்ட மற்ற இரு ஹோட்டல்களும், இலங்கை பன்னாட்டு நிறுவனமான ஜோன் கீல்ஸ் நிறுவனத்துடன் தொடர்பு உள்ளவை.

**ஜோன் கீல்ஸ் நிறுவனத்தில் சீனரின் முதலீடுகளும், நடமாட்டமும் அதிகம் என்பதை கிங்ஸ்பரி விடுதியில் தங்கி இருந்து கொல்லப்பட்ட, சீனப் பிரஜைகள் 6 பேரில், இருவர் தென் சீனக் கடலாய்வு நிறுவனத்தின் மூத்த பொறி இயல் நிபுணர்கள். இருவர் இயற்கை விஞ்ஞான அமைச்சின் முதலாவது கடலாய்வுக் கழகத்தின் சமுத்திர இயல் ஆய்வாளர்கள். இலங்கையின் கிழக்குக் கடலாய்வை நடத்தும் அணியுடன் சேருவதற்காக இவர்கள் அங்கு தங்கி இருந்தவர்கள்.**

**இலங்கையை தனது கட்டுப்பாட்டில் கொண்டுவரத் துடிக்கும் இந்திய அரசின் எண்ண வெளிப்பாடுகளை, அதன் சீனா மீது கொண்டுள்ள பகைமையை இத்தாக்குதல்கள் வெளிப்படுத்துவதாக ஆய்வாளர்கள் பார்க்கிறார்கள்.**

**கோட்டபாயாவை அதிபர் பதவியில் இருத்த அமெரிக்கா கொண்டுள்ள அவா!, சீனாவின் இலங்கை மீதான செல்வாக்கை தடுக்க முயலும் இந்தியாவின் ஆசை! இவற்றின் கூட்டு இணைவுதான் உயிர்த்த ஞாயிறு தமிழ் கிருஸ்தவர்களை பலி கொள்ள வைத்த தாக்குதல்கள். இலங்கை இனப் பிரச்சனையில் தமிழ் இனத்தை வறுத்தெடுத்த இந்தியா, இப்பொழுது இலங்கை முஸ்லிம்களை குறி வைத்த தாக்குதல்களின் பின்புலத்திலும் தெரிகிறது.**





INNENSTADT WEST
ortel MOBILE
DORTMUND
மாநகரில்
தமிழர் தெருவிழா
2019
Straßenfest der Tamilen
07.09.2019
100 க்கும் மேற்பட்ட கலைஞர்கள் சங்கமிக்கும் மாபெரும்
ஆடல் பாடல் கொண்டாட்டம்....
தமிழர் அரங்கம்
Verein für tamilische Künstler e.V
VMDO
Der Verbund der sozial-kulturellen Migrantenvereine in Dortmund e. V.
HOUSE OF RESOURCES
Tamilischer Kultur Do
TKD
தமிழர் கலையகம்
Bildung
Begegnung
Beratung
ஜேர்மன் தமிழ் வர்த்தகர் சங்கம் e.V
GTVS
comdu.it
Deutschland
வெற்றிமணி
தமிழ் ரைம்ஸ்
TAMIL TIMES
அகரம்
IBC தமிழ்
GTV
itn
தமிழ் MTV
STS தமிழ் TV
tamil.de
portal • lifestyle • entertainment
Lankasri
0151 633 633 33 | 0157 735 178 49 | 0177 679 4261 | 0162 803 1647 | 0151 27 990 990

அன்புச் செல்வன்



# ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?

# கிழக்கு மாகாணம் காத்தான் குடியில் ஒரு அராபிய தேசமா?

**சிங்களம் ஒரு புறம், முஸ்லிம்கள் மறு புறம்! ஈழத் தமிழர் தமது தாயகத்தை இழப்பதா?**

**குமரிக் கண்டத்தில் 50,000 வருட வரலாற்றைக் கொண்டுள்ள ஈழத் தமிழ் இனம் தனது தாயக்தைப் பறி கொடுப்பதா?**

ஈழத் தமிழ் இனம் தனது தாயக மீட்பைத் துரிதப் படுத்த வேண்டிய கட்டாய காலத்தில் உள்ளதை, 2019 கத்தோலிக்கத் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு இஸ்லாமிய பயங்கரவாத குண்டுத் தாக்குதல்கள் அர்த்தப் படுத்துகின்றன.

2009 முள்ளி வாய்க்கால் பொது மக்கள் படு கொலைகளைக் கண்டு கொண்ட உலக மனித உரிமை அமைப்புகள், ஈழத் தமிழர்கள் மீதான போரானது ஒரு இனஅழிப்பே என ஏற்று, அதற்கான சர்வதேச விசாரணைகளைத் தொடர வேண்டும் எனப் பல தடவைகள் வற்புறுத்தி வந்துள்ளன. ஆயினும் உலகப் பலமிக்க அரசுகள் மற்றும் இலங்கை அரசின் ஆதரவை நாடும் பிராந்திய அரசுகளான இந்தியா, பாக்கிஸ்தான், சீனா, ஜப்பான் போன்ற நாடுகள் தமது சுய விருப்பங்கள், இலாபங்கள் நலன்கள் கருதி, சர்வதேச விசாரணைகளைத் தடுத்தும், தவிர்த்தும் வந்துள்ளன.

ஈழத் தமிழ் மக்களின் அரசியல் பிரதி நிதிகளாக பாராளுமன்றக் கதிரைகளை அலங்கரிப்பவர்கள் யாவரும், மனதால் தமிழ் இன அபிமானம் அற்ற அந்நிய நாட்டு இனங்களின் கைக் கூலிகளாக மாறி விட்டதன் காரணமாக, தமிழ் மக்களின் எந்த ஒரு அடிப்படைத் தேவைகளையும் அறியாத அல்லது அறிந்தும் அவற்றை வாயால் பேசிப் பெறும் ஆற்றல் கூட அற்றவர்களாக மாறி விட்ட நிலையே தொடருகிறது.

மனித உரிமைகள் தொடர்பாக உலகம் உரத்துப் பேசிவரும் உண்மைகளைக் கூட உறுதிபடப் பேசி, அரசிடம் வாக்களித்த மக்களுக்கான நீதியும், நிவாரணமும்,

நிம்மதியான வாழ்வையும் உறுதிப்படுத்தும் எந்தவித செயலையும் செய்ய முடியாத மலட்டு அரசியலை முன்னெடுத்து வருவதையே குறிப்பாகக் கடந்த 10 ஆண்டுகளாகக் காண்கிறோம்.

இந்த இடத்தில் எமது அரசியல் ஆய்வாளர் திரு. த.எதிர்மன்னசிங்கம் சென்ற அகரம் இதழில் “இந்தியாவால் ஈழத் தமிழ் இனம் அழிந்தது, தமிழகத் தமிழினம் தப்புமா?” என்ற தலைப்பில் வெளியான கட்டுரை, எந்த அளவுக்கு யதார்த்த நிலையை வெளிப்படுத்தியது? என்பதற்கு ஆதாரமாக இந்திய அரசு, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை, மேலும் 5வருடத்துக்கு நீட்டிப்பு செய்துள்ளது என்கிற செய்தி உறுதிப்படுத்தி உள்ளதைக் காணலாம்.

உயிர்த்த ஞாயிறு இஸ்லாமிய வன்முறைக்கு உள்ளான தமிழ் கத்தோலிக்க மக்கள், இஸ்லாமிய மதத் தீவிரவாதம் கிழக்கிலே காத்தான் குடியில் மிக ஆழமாக வேரூன்றி, இன்று இலங்கையில் பரவலாக தாக்குதல் நடத்தியதும், அதனால் வன்முறைத் தாக்குதல்கள் இலங்கை முழுவதும் பரவி விட்ட நிலையில், ஈழத் தமிழரின் தாயக மீட்புப் போராட்டம் தீவிரப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் ஈழத் தமிழினம் உள்ளது.

“பனை மரத்தில் தேள் கொட்ட, தென்னை மரத்துக்கு நெறி கட்டியதாம்” என்பது போல, கொழும்பிலும், கிழக்கிலும் நடத்தப்பட்ட தாக்குதல்கள் காரணமாக யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் சங்கத் தலைவரும், செயலாளரும், ஒரு உணவு விடுதி ஊழியரும் கைது செய்யப்பட்டு, நீதி மன்றத்தால் பிணையில் விடுதலையாகி உள்ளார்கள்.

“மழை விட்டும் தூவானம் போகவில்லை” என்பது போல 2009ல் இன அழிப்புக்கு உள்ளான தமிழ் இனம், வருடங்கள் 10 கடந்த நிலையிலும் நீதி விசாரணையோ, போதிய அடிப்படை நிவாரணமோ வழங்கப் படாமல் இராணுவ ஆட்சியில் துன்புறுத்தப்படும் நிலையில், இத்தகைய அரசு தரப்பின நடவடிக்கைகளை தாங்கிப் பொறுத்துப் போகும் நிலையில் தமிழ் மக்கள் இருப்பார்கள் என அரசும், அதன் பங்காளிகளான தமிழர் தேசியக் கூட்டமைப்பும் எதிர்பார்த்தால், அது அவர்களின் தவறே அல்லாமல், தமிழ் மக்களின் தவறாக இருக்காது.

இது தொடர்பாக யாருக்கேனும் சந்தேகம் இருக்கக் கூடாது என்பதால் கொழும்பு ரெலிகிராஃப் எனும் ஆங்கில இணையத்தில் பதிவான வாசகர் கருத்துகளில் சிலவற்றை இங்கு நாம் தர விரும்புகிறோம். அவற்றின் உண்மைத் தன்மையும், கால மாற்றத்தால் மக்கள் மனதில் எழுந்துள்ள மாற்றங்களும், தனித் தமிழ் ஈழத்துக்கான அவசரமும், அவசியமும் உணருவது கடினமாக இருக்காது. (கருத்தாளர்களின் பாதுகாப்புக் கருதி அவர்களது பெயர்கள் தரப்படவில்லை.)

**கருத்து 1. :** ஆம்! இந்த இந்தியர்களும், உள்துறை அமைச்சு அலுவலகமும் மலையாளிகளால் நிரம்பி உள்ளது. (இவர்கள் ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன்பாகத்தான் தமிழ் மக்களிடம் இருந்து பிரிந்த இனம்) பிராமணர்கள் (சுப்பிரமணிய சுவாமி போன்ற சில தமிழர்களும் கூட) மற்றும் வட இந்தியர்கள் அவர்களே உருவாக்கிய தமிழீழ விடுதலைப்





ESTD 1992
Gopara Gnanam
மங்கையர் மனங் கவரும்
இந்த வருடத்திற்கான
புத்தம் புதிய ஆடைகள்
Wedding Sarees
DISCOUNT!!
Mob : 0171 330 65 42,
0176 246 54 009

புலிகள் தொடர்பாகவும், பொய்யான இந்தியாவுக்கு ஆபத்து என்கிற மனப்பிரமை கொண்டுள்ளனர்.

புலிகள் என்கிற வண்டியும், அவர்களால் ஆபத்து என்கிற பொய்யை அடிக்கடி கொண்டு வந்து கொண்டிருக்கின்றனர். ஆனால், உண்மையில் புலிகள் உயிரோடு இருந்த காலத்தில் பலமுடனும், வடக்குக் கிழக்குப் பகுதிகளை ஆட்சி செய்த போதிலும், இந்தியாவை இஸ்லாமிய சலாபிகளிடம் இருந்தும், இலங்கை இஸ்லாமியரின் தீவிரவாதத்தில் இருந்தும் பாதுகாத்தனர் என்பதே உண்மை யதார்த்தம்.

கெடு வாய்ப்பாக இலங்கையிலும், தமிழகத்திலும் உள்ள முஸ்லிம்களும், சிங்கள பௌத்த வெறியர்களும், சீனா பாகிஸ்தானுடன் நட்பு கொண்டு, இந்தியாவை அழிக்க விரும்பினர். விடுதலைப் புலிகள் இவ்விரு தீவிரவாதிகளையும் கட்டுக்குள் வைத்து, இந்தியாவின் தெற்குக் கரைகளை பாதுகாத்தனர்.

இப்பொழுது இந்தியா பலவீனமாக உள்ளது. உண்மையை உணருவதற்குப் பதிலாக, இந்த தமிழர் எதிர்ப்பு இந்தியர்கள் தொடர்ந்தும் புலிகள் எதிர்ப்புப் போர்ப் பறையை அடிக்கின்றனர். புலிகள் இந்தியாவைத் தாக்கிய ஒரே தடவை ராஜீவ் காந்தியைக் கொன்றதுதான். அதுவும் வடக்கு கிழக்கில் தமிழருக்கு இந்திய அமைதி காக்கும் படை என்ன செய்ததோ, அதற்குப் பழி வாங்கும் செயலாக. அதுவும் இல்லை என்றால் புலிகள் ஒரு பொழுதும் இந்தியாவைப் பற்றிக் கவலைப் பட்டிருக்க மாட்டார்கள்.

புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஈழத்தை முன்னெடுத்துச் செல்ல எல்லா உரிமைகளும் கொண்டிருக்கிறார்கள். இதனை மறுக்க இந்திய உட்துறை அலுவலக பயலுகள் யார்? ஆனால், ஒரு போதும் இல்லாத பலுச்சிஸ்தான் தாயகத்தை இப்பொழுது பாக்கிஸ்தானில் ஆதரிக்கிறார்கள்.

புலிகளைத் தோற்கடிப்பதில் இந்தியாவின் அசிங்கமான வகிபாகம் என்ன? என்பதையும், இலங்கை அரசாங்கத்தைப் போர்க் குற்ற விசாரணைகளில் இருந்து எப்படிச் சிங்களத்தைப் பாதுகாத்தது? என்பதையும் அறிந்திருக்கிறார்கள். எனவே புலிகளோ, புலம்பெயர் தமிழர்களோ எதுவும் பேசவேண்டியது இல்லை.

இந்திய உள்துறை அலுவலகத்தின் இத்தகைய முட்டாள்தனமான செயல்களும், அறிக்கைகளும்தான் இலங்கைத் தமிழ் மக்களிடையே இந்திய எதிர்ப்பு உணர்வுகளைத் தூண்டுகிறது.

இல்லாத புலிகள் அமைப்பும், இலங்கைத் தமிழ் மக்களும்தான் இந்தியாவுக்கு ஆபத்தானால், இந்த ஐ.எஸ்.ஐ.எஸ் சலாபிகளும், உள்ளூர் இலங்கை முஸ்லிம்கள், அல்லது சிங்கள இனவெறியர்கள் இல்லையா? என்ன அவர்கள் பகடி பண்ணுகிறார்களா?"

**கருத்து 2 :** முன்னர் இந்த முஸ்லிம் பயலுகள் தமிழர்களைக் கொள்ளை அடிக்க இதே குண்டர்களுக்கு உதவி செய்தும், இராணுவ புலனாய்வில் உதவியும் செய்ததற்கு இப்பொழுது திரும்ப வாங்கிக் கட்டுகிறார்கள். இதை ஒரு பக்கத்தில் விடுவோம். அவர்கள் மட்டக்களப்பிலும், மன்னாரிலும் தமிழர்களின் காணிகளைச் சட்டத்துக்குப் புறம்பாக எடுத்ததைப் பற்றிக் கண்டறிய வேண்டும். அவர்கள் பொய்யான பத்திரங்களைத் தயாரிப்பதாக குற்றம் சாட்டப் படுகிறது. அவர்களின் குற்றச் செயல்கள் முழுமையாக விசாரிக்கப்பட வேண்டும். முக்கியமாக முஸ்லிம் அரசியல்வாதிகளும், அவர்களின் அரசியல் கூலிகளும்.

இராணுவத்தைச் சொன்னால், அது சிங்கள இராணுவம் மட்டுமே, இலங்கை அரசின் இராணுவம் அல்ல. எனவே, இப்படித்தான் அவர்கள் பயிற்றப் பட்டிருக்கிறார்கள். பாடசாலைகள், மருத்துவமனைகள் பாதுகாப்பு வலையங்கள்தான் அவர்களின் குண்டுத் தாக்குதல் இலக்குகள்."

இன்று உலகம் தமிழருக்கான தாயகத்தின் தேவையை உலகுக்கு உரத்துச் சொல்லும் அளவுக்கு, இலங்கையின் இஸ்லாமியத் தீவிரவாதம் சூழ்நிலைகளை ஏற்படுத்தி விட்டது.

இப்பொழுது நாம் சிந்திக்க வேண்டியது கிழக்குத் தமிழ் முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலம் பற்றிய உறுதியான தீர்மானம் பற்றியது. அவர்களுக்காக எமது தனி நாட்டுக் கோரிக்கையை விட்டு விட முடியாது.

**தேடல் தொடரும்.....**

# Jaffna Stores

**Geschäftsführer : Herr Thayaharan Nadarajah**







தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

மண்மணம் மாறாத சுவைதரும்
தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்

மொத்தமாகவும், சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை விற்பனை செய்ய
விரும்புவோர் தொடர்புகொள்ளுங்கள்




ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள், இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்

**www.jaffnastores.com**
**info@jaffnastores.com**





# வெற்றித் தீ வேள்வியில் வீழ்ந்து படும் விட்டில்கள்.... !

சாத்தான்குளம் அப்துல் ஜப்பார்.

தமிழக அரசியல் ஒரு நாற்சந்தியில் நிற்கிறது. வலது பக்கம் திரும்பவா ?, இடது பக்கம் திரும்ப நேராகப் போகவா ? அல்லது வந்த வழியே திரும்பி விடவா ? பதில் தெரியாத, கிறுக்குப் பிடிக்க வைக்கும் கேள்விகள்.. என்றாலும் விடுவோமா ? விடைக்குக் கிடந்து அல்லாடுகிறோம்.

39 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும், 22 சட்டமன்ற தொகுதிகளுக்குமான இடைத் தேர்தல்கள் நடந்து முடிந்து விட்டன. அரை மணி நேரத்தில் முடிவைச் சொல்லி விடுவார்கள். ஆனால் "ஒப்புகைச் சீட்டு சரிபார்க்கப்பட வேண்டியதிருப்பதால் 23-ம் தேதி வரை முடிவுக்குக் காத்திருக்க வேண்டியதிருக்கிறது.

காத்திருக்கலாம்தானே ? காத்திருக்கலாம்!!. ஆனால், அதிகார ருசி கண்டவர்களால் அது முடியவில்லை. காரணம் இல்லாமல் இல்லை. சட்டமன்ற இடைத்தேர்தலில் ஆளும் கட்சி ஆகக் குறைந்தது, அறுதிப் பெரும்பன்மைக்கு பத்து தொகுதிகளையாவது கைப்பற்றியாக வேண்டும். இல்லாவிட்டால் பாயையும் சுருட்டிக் கொண்டு வீட்டில் போய் படுத்துக் கிடந்து உறங்க வேண்டியது தான்.

வாக்குப் பெட்டியினூடாக வர வேண்டிய அதிகாரத்தை, பணப்பெட்டி மூலம் பெற்று விடலாம் என்று சிலர் கணக்குக் போடுவதாகத் தெரிகிறது. வாக்காளர்களுக்கு வாரிக்கொடுத்தோம் சில்லறை, சில்லறையாக !. பலன் கிடைக்குமானால் இப்போது அதைக் கோடிகளில் குவித்தால் போயிற்று!. ஒரு நபருக்கு பத்து கோடி என்றாலும் நூறு கோடி தானே ஆயிற்று.

அதுவென்ன பெரிய தொகையா ? சிலருக்கு ஜுஜுபி... என்றாலும், இவர்கள் சட்டச் சிக்கல்கள் எல்லாவற்றையும் தாண்டி விடுதலையாகி வெளியில் வரவேண்டும். பிறகுதான் இன்னும் ஒரு கட்சி தாவல் பற்றிச் சிந்திக்கலாம்.

# AMMA's food

## Dortmund

அன்பான உபசரிப்போடும், ஆனந்தமாய் கொத்து றொட்டி, இடியாப்பக் கொத்து,
புட்டுக் கொத்து, இட்லி, தோசை, மசாலா தோசை, பிரியாணி, பாலப்பம்
இன்னும் பல வகையான  உணவுகளை உங்கள் விருப்பத்துக்கேற்றவாறு
உண்டு மகிழ்ந்திட என்னும் உங்கள் நினைவில் நிற்கும்





## அம்மா’ஸ் உணவகம்








**0049 1776 794 261**
**0049 231 00 898 691**

ktheepan@hotmail.de
www.ammas-food.de
AmmasFood

**Rheinische Str-80A, 44137 Dortmund, Germany**

கட்சித்தாவல் சட்டம் என்பது, ஒரு புரியாத புதிராக இருக்கிறது. துணை முதல்வர் பன்னீருக்கு எதிராக ஒரு வழக்கு, நீண்ட காலமாக தீர்ப்புக்குக் காத்திருக்கிறது. அதே சமயம் தினகரன் ஆதரவாளர்களுக்கு எதிரான கட்சித் தாவல் வழக்கு, தகுதி நீக்கம் வரை போய் பதவியும் பறிக்கப்பட்டு, அது தொடர்பான தீர்ப்பும் உடனே வரவிருக்கிறது.

இதில் ஒரு வேடிக்கை அதிமுகவில் சசிகலா ஒரு பிரிவு, பன்னீர் செல்வம் ஒரு பிரிவு, பழனிச்சாமி ஒரு பிரிவு, தினகரன் ஒரு பிரிவு என்றாலும் அடிப்படையில் சட்டப்படி இவர்கள் அனைவரும் அ.தி.மு.க உறுப்பினர்களே!. அவர்கள் தங்களுக்குள் சேர்வதும், பிரிவதும், கட்சித்தாவல் ஆகாது என்று ஒரு வியாக்கியானம் புதிதாக புறப்பட்டு வந்திருக்கிறது.

தீர்ப்பு என்னவாகுமோ? என்று எதிர்பார்த்தது போக, எப்படி வந்தால் என்ன? என்கிற ஒரு விரக்தி மனப்பான்மை படர்வதை நன்கு அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. ஏனெனில் சரியாகவோ, தவறாகவோ அதிமுக மாநில ஆட்சியை தக்க வைத்துக் கொள்ளுமாயின், எதுவெல்லாம் தமிழகத்துக்கு ஆகாது என்று போராடினார்களோ, எதற்காக 13 + 14 உயிர்களை பரிதாபமாகப் பலி கொடுத்தார்களோ, அத்தனையும் தங்கு தடையின்றி தமிழக தலை வாசல் வழியாக, ஆடிப்பாடி அணிவகுத்து உள்ளே வரும்.

காவேரி, முல்லைப்பெரியார், மேகதாது அணைகள், நதிகள் இணைப்பு என்ற பெயரில் நயவஞ்சகம். ஹட்ரோ கார்பன், மீத்தேன் வாய்வுகள், ஸ்டெரிலைட் ஆலை திணிப்பு, கோபுர மின் இணைப்பு, சாலை ஓரத்தை விட்டு பொன் விளையும் பூமியான நடு வயலில்தான்குழாய் பதிப்போம் என்கிற பிடிவாதம். கீழடி அகழ்வாராய்ச்சியில் அலட்சியம், எங்கே போய் முட்டிக்கொள்வது?

உண்மையைச் சொன்னால் இவை எவற்றையும் வடவர்கள் நம் மீது திணிக்கவில்லை. நம்மவர்களையும் பக்கத்தில் வைத்துக் கொண்டு யாருக்கும் நோகாமல் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுகிறார்கள், அவ்வளவுதான்!. அதைத் தட்டிக்கேட்க நமக்கும் துணிவில்லை, நம்மவருக்கும் தைரியமில்லை. ஜனநாயகம், தார்மீகம், பண்பாடு, பாரம்பரியம் இவையெல்லாம்

பொருளற்ற வெற்றுச் சொற்களாக மாறும் காலம் வெகு தூரத்தில் இல்லையோ? யாமறியோம் பராபரமே!

**நிறைவு.**



# DORTMUND மாநகரத்திலே தாயக மரக்கறிகள், பழவகைகள் மற்றும் உணவுப் பொருட்களை மொத்தமாக பெற்றுக் கொள்ள நாடுங்கள்

StaR-Impex




Rabeena Since 1986 We've Mastered Taste

Aachi The Mother of Good Taste

BTM

பொருட்களை
ஜேர்மனியில்
மொத்தமாக
விநியோகம்
செய்யும்
ஒரே நிறுவனம்

Double Horse
Bringing Health to Life

## Lebensmittel Grosshandel e.K.

Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698
email : info@star-impex.de
web : www.star-impex.net

TRS ASIA'S FINEST FOODS




MDH · Laziza International · Cock Brand · Daawat The Finest Basmati · Elephant House · Shan · Akash Basmati · Rubicon · Tilda Legendary Rice

Nestle · PG tips · Niru Brand · Aroy-D · MTR · Aashirvaad · Pillsbury · Patak's Original · Laila



ஆய்வாளர் சேது, அமெரிக்கா

# தமிழீழ விடுதலைப்போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

இன்று பரவலாக நிலவும் சிந்தனைகள் என்னெனவென்றால், நாம் எதிர்நோக்கும் சிக்கல்கள் அனைத்தும் அரசியல் சிக்கல்களே. அதனால் அரசியல்தான் இதற்குத் தீர்வு என்ற அடிப்படையில் சிக்கல்கள் அணுகப்படுகின்றன. இது ஓர் எளிமையான பார்வை. சமூகம் என்பது சிக்கலானது, அதன் உண்மையான சிக்கலை உணர்ந்து காய்களை நகர்த்துவதன் மூலமே வெற்றிகொள்ள முடியும். அரசியல் வெற்றி என்பது மக்களிடமிருக்கும் கற்பிதங்களை நம்பியே இருக்கிறது. ஆனால் கற்பிதங்களை மக்களிடம் பரப்புவதற்கோ, குழந்தைகளுக்குக் கற்பிப்பதற்கோ, அதைக் கொண்டு சமூகத்தை சீரமைப்பதற்கோ எந்த பெரிய பண்பாட்டு அமைப்புகளும் ஏற்படுத்தப் படவில்லை. அரசியலும் பண்பாட்டு செயல்பாடுகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டது. இவை இரண்டும் நடத்தப்பட வேண்டும். இவ்வாறுதான் தேசியங்கள் வரலாற்றில் வெற்றி அடைகின்றன.

உலகிலுள்ள உயிர்கள் தங்களைக் காத்துக்கொள்ள பயன்படுத்தும் முதன்மையான உத்தி என்பது, மாறும் சூழலுக்குக்கேற்ப கற்று தன்னை மறுசீரமைத்துக் கொள்வதுதான். இதுதான் டார்வினின் அடிப்படைத் தத்துவம். இதுபோன்ற மறுசீரமைப்புகள் சமூகத்தில் ஒரு பெரிய இடரின் விளைவாகத் தோன்றுகின்றன. எந்த சமூகங்கள் இவ்வாறு மறுசீரமைக்கின்றனவோ, அவை சாதனைகளின் உச்சத்திற்குச் செல்கின்றன. அவ்வாறு சீரமைக்க முடியாதவை

# V one DISTRIBUTION

**Rheinische Str. 70 44137 Dortmund**

T 0231 330 16 114 ✉ V-ONE@outlook.de

Handy Verträge ab 1,- €
Handy Zubehör
Handys
Handy Reparatur
Festnetz DSL
Prepaid SIM
Prepaid Guthaben

KFZ Gutachten
Passbilder
Event Fotos& Videos

Privat Kredit

Handy Versicherung
KFZ Versicherung
Haftplicht Versicherung
und vieles mehr...

vodafone
YUPPTV
ay yıldız
dpd Pickup
FLiXBUS
Lyca mobile Call the world for less
Lyca TV
WESTERN UNION WU moving money for better
MoneyGram
unitymedia
KFZ-SACHVERSTÄNDIGER AMBERG
1&1
BLACK DIAMOND
ortel MOBILE
Ria Money Transfer
LEBARA
yourfone
T · · Mobile ·
O2
otelo

அழிகின்றன. ஈழப்போரின் அழிவு தமிழ்ச் சமூகத்திற்கு ஒரு மறுசீரமைப்பிற்கு வழி வகுத்திருக்கிறது. அவ்வாறு செய்வதற்கான கற்பிதங்களையும் உருவாக்கித் தந்திருக்கிறது. அவற்றைக் கொண்டு மறுசீரமைப்பை நோக்கி செயல்படவேண்டியது அவசியமானது. இது ஓரிரு நாட்களில் நடப்பது அல்ல. கற்பிதங்கள் நிலைபெற்று சமூக மறுசீரமைப்பு நடைபெற ஓரிரு தலைமுறைகள் ஆகும். அவ்வாறு நீண்டகால நோக்கில் பண்பாட்டு அமைப்புகளை உருவாக்கி செயல்பட வேண்டும். அதுதான் நம்மை பலப்படுத்திக் கொள்ள இருப்பதிலேயே சிறந்த உத்தி.

ஈழப்போரில் தோல்வியுற்றோம் என்ற எண்ணத்தை நாம் நீக்கவேண்டும். ஈழத்தைவிட பெரிய வெற்றியாக வரலாற்றுக் கற்பிதங்களை ஈழப்போர் படைத்திருக்கிறது. அந்த உண்மையான வெற்றியைக் கொண்டாடவேண்டும். இதை நான் ஒரு உளவியல் காரணத்திற்கு மட்டுமல்ல, ஒரு வரலாற்று உண்மையாகவும் முன்வைக்கிறேன்.

பி.கு: நான் புலிகளிடமிருந்து வரலாற்றுக் கற்பிதங்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறுவது, அவர்கள் செய்தது அனைத்தையும் சரி என்று நியாயப்படுத்துவது அல்ல. பிழைகளும் நடந்திருக்கின்றன. நமது முன்னேற்றத்திற்குத் தேவையான நல்ல பாடங்களையும் கற்பிதங்களையும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதுதான் எனது கருத்து. உலகிலுள்ள அனைத்து நாடுகளின் வரலாற்றிலும் தவறுகள் நடந்துள்ளன. அதற்காக அவர்களின் மாவீரர்களைத் தூற்றுவதில்லை. தவறுகளை ஏற்றுக் கொள்ளுவோம், மாவீரர்களைப் போற்றுவோம். நாம் எந்த கற்பிதங்களை ஏற்றுக்கொள்ளுகிறோம் என்பதை நிர்ணயிக்கும் உரிமை நமக்கு மட்டும்தான் உண்டு, அதை மற்றவர்கள் தீர்மானிப்பதை அனுமதிக்கக் கூடாது.

## தமிழ்த்தேசியத்தை பரிணமித்துதான் வெல்ல முடியும்

புலிகளால் ஈழப் போர்களில் உலகை வியக்கவைக்கும் பல வெற்றிகளைப் பெறமுடிந்தது. இது எவ்வாறு சாத்தியமானது? இதற்கு பெரும்பாலானோர் கூறும் காரணம் பிரபாகரனின் நிகரற்ற தலைமை என்பதே. இதில் எந்த பெரிய மாற்றுக் கருத்து யாருக்கும் இருக்க முடியாது. ஆனால் இதுபோன்ற விளக்கங்களின் சிக்கல் என்னவென்றால், இனி வெற்றிகரமான இயக்கங்களை எவ்வாறு கட்டி எழுப்புவது என்று எந்த ஒரு விளக்கத்தையும் இது அளிப்பதில்லை. இந்த




விளக்கத்தின்படி நாம் நல்ல தலைமைக்காக காத்திருக்க வேண்டியதுதான். இன்றைய தமிழ்த்தேசிய அரசியலைப் பார்த்தால், அதுதான் இப்பொழுதைய உத்தி போலத் தோன்றுகிறது.

நமது சிந்தனையின் அடிப்படைச் சிக்கல் என்னவென்றால் நாம் சிக்கலான பிரச்சினைகளுக்கும் பொதுப் புத்தியைக் கொண்டு ஆராய்வதுதான். இயற்பியல், வேதியியல், உயிரியல், கணிதம் ஆகிய பாடங்கள் கடினமாகக் கருதப்படுகின்றன, ஆனால் அரசியல் சிக்கல்கள், சமூக சிக்கல்கள் என்று வந்து விட்டால் நாம் அனைவரும் மேதாவி ஆகிவிடுகிறோம். சமூகத்தைப் புரிந்து கொள்வது அறிவியலைப் போல கடினமில்லை என்று நினைக்கிறோம். இது முற்றிலும் தவறான பார்வை. நம்மால் அறிவியலைக் கொண்டு சந்திரனுக்குப் போய்வர முடியும், ஆனால் சமூக சிக்கல்களை எப்படித் தீர்ப்பதென்று தெரியாது. தெரிந்திருந்தால் உலகிலுள்ள சமூக சிக்கல்களை என்றோ தீர்த்திருப்போம்.

அவ்வாறு இருக்கும்பொழுது நாம் சமூக அறிவியலை பற்றி மட்டும் ஏன் எளிதாக எடுத்துக் கொள்கிறோம்? இதற்கு அடிப்படைக் காரணம் நமது பொதுபுத்தியின் ***(Common sense)*** தன்மை அப்படி" என்கிறார் இடங்கன் வாட்சு. நமது பொதுப்புத்தி என்ன செய்கிறது என்றால், ஒரு நிகழ்வு நடந்த முடிந்தபின் ஒரு கதையை உருவாக்குகிறது. உதாரணமாக ஈழப்போரில் புலிகள் வெற்றிபெற ஆரம்பித்தபின் ஒரு நல்ல தலைமையினால்தான் இது சாத்தியமானது என்று பொதுப்புத்தியில் மூலம் முடிவுக்கு வருகிறோம். இதுபோன்ற விளக்கங்கள் நடந்து முடிந்தபின்புதான் சாத்தியம்.

நடப்பதற்கு முன்பே இந்த பொதுப்புத்தி விளக்கத்தால் எந்த நிகழ்வையும் கணிக்கப் பயன்படாது. ஆயுதப்போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் பல்வேறு ஆயுதக் குழுக்கள்






தோன்றின. அவற்றில் எது மாபெரும் இயக்கமாக வரும் என்று யாருக்கும் தெரியாது. புலிகளுக்கு பயிற்சி கொடுத்த இந்தியப் படைகளுக்கும் தெரியவில்லை. ஏன், அது புலிகளுக்கே தெரிந்திருக்குமா என்பதே சந்தேகமே. புலிகள் ஏன் வெற்றியடைந்தார்கள் என்பதை முறையான அறிவியல் தத்துவங்களைக் கொண்டே அறிய முடியும்.

நம்மால் சந்திரனுக்குப் போய் வருவது எளிதா அல்லது ஈழம் அடைவது எளிதா என்று கேட்டால் என்ன சொல்வீர்கள்? சந்திரனுக்கு எப்படிப் போய்வருவது என்பது அறிவியலால் ஏற்கனேவே அறியப்பட்ட ஒன்று. ஆனால் ஈழம் எப்படிப் பெறுவது என்ற ஒரு திட்டம் உலகில் எந்த அறிவாளியிடமும் இல்லை. புலிகள் சாதனையின் உச்சத்திலிருந்த பொழுது கூட, எப்பொழுது ஈழத்தை அடைவீர்கள் என்ற கேள்விக்கு "ஈழம் அடைவதுதான் குறிக்கோள், ஆனால் எப்பொழுது என்று கூறமுடியாது" என்றே பிரபாகரன் அவர்கள் கூறியிருக்கிறார்கள். நமது சிக்கல் என்பது ஈழத்தை எப்பொழுது அடைவோம் என்பது மட்டுமல்ல, அதற்கு எந்தப் பாதையில் செல்லவேண்டும் என்பதுகூட அறியப்படாத ஒன்று.

சமூகம் என்பது மிகச்சிக்கலான அமைப்பு. அதில் ஒரு நாட்டை அடைவது என்பது எளிதானது அல்ல. அது மக்களின் ஒத்துழைப்பு, எதிரிகளின் பலம், நமது பலம், அண்டைய நாடுகளின் போக்கு, உலக நாடுகளின் சுயநலம், பல்வேறு அமைப்புகள், உலகப் பொருளாதாரம், உலக ஒழுங்கு எனப் பலவற்றை நம்பியுள்ளது. இவை காலத்திற்கேற்ப மாறிக் கொண்டே இருக்கும். இவ்வாறான மிகச்சிக்கலான அமைப்புகளில் ஏற்படும் சிக்கல்களை *X=?* என்று கணிதத்தில் விடை காண்பதுபோல சிந்தித்து கணித்து விடை காண முடியாது.

கடந்த சில பத்தாண்டுகளாக சிக்கலான அமைப்புக்களைப் பற்றிய ஆராய்ச்சிகள், இதுபோன்ற சிக்கல்களுக்கு முழுத் திட்டமிடல் சாத்தியமில்லை என்றே கூறுகிறது. நம்மால் ஈழத்தை முழுத்திட்டமிட்டு அடைய முடியாது, அப்படி ஒரு திட்டம் இருக்கவும் முடியாது. அப்படி என்றால் தீர்வுதான் என்ன? சிக்கலான அமைப்புக்களைப் பற்றிய ஆராய்ச்சிகள் கூறுவது என்னவென்றால், இதற்கு பரிணாமம்தான் ***(Evolution)*** ஒரே தீர்வு. இவ்வுலகில் முழுத் திட்டமிடல் இல்லாமல் இலக்கை வீழ்த்தும் ஒரே உத்தி பரிணாமம்தான், வேறு வழி இல்லை.

புலிகள் பலம் வாய்ந்த இயக்கமாக மாறுவதற்கும், பலவெற்றிகளைப் பெறுவதற்கும் அடிப்படைக் காரணம் அவர்கள் இந்த பரிணாம உத்தியின் வழியாக பயணித்ததே. இதை அவர்கள் அறிந்து செய்யவில்லை, மாறாக வரலாறு தற்செயலாக அவர்களை அப்பாதையில் செலுத்தியது. இக்கட்டுரையின் அடிப்படை நோக்கம் அந்த உத்தியை வெளிப்படையாக்குவதே. முதலில் பரிணாம உத்தி எவ்வாறு வேலை செய்கிறதென்று பார்ப்போம், பின்பு இந்த பரிணாம உத்தி எவ்வாறு புலிகளை வடிவமைத்தது என்று ஆராய்ந்து, அதன்பின் இன்றைய சூழலில் இந்த உத்தியை நாம் எவ்வாறு பயன்படுத்தி செயல்படுவதென்று பார்ப்போம். இதுவரை நாம் கொண்டிருக்கும் கருத்துக்களை உத்திகளை எல்லாம் இது பெரும்பாலும் தலைகீழாக்கும், அதனால் திறந்த கண்ணோட்டத்தோடு படிக்கவும்.

AKM

**Alpenstr.1, 3072 Ostermundigen**
**Tel. 031 9312525 (Bern Nilavani)**
**Basel Str. 80, 6003 Luzern**
**Tel. 041 2405400**

**மலிவு எங்கும் கிடைக்கும் தரத்துடன் கூடிய இலாபம்..!**

**தமிழனின் வரலாற்றில் மாபெரும் புரட்சி**

**இதய பூமியாம்**
**கிளிநொச்சியை மையமாகக் கொண்டு**
**தமிழரின் உழைப்பில் உற்பத்தியானது**






**உங்கள்**
**இனத்துக்கு உதவிய**
**திருப்தியுடன்**
**வாங்கிச்**
**செல்லுங்கள்!**



AKM

முத்திரை பதித்த
அனைத்துப் பொருட்களையும்
ஒருமுறைச் சுவைத்தால்
ஈழத்துச் சுவை உங்கள் நாவில்
ஆழமான தனிச்
சுவை தரும்..!

கிளிநொச்சி / முல்லைத் தீவு / யாழ்
மன்னார் மாவட்டங்களில் இருந்து
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு பொருளிலும்
ஒரு தமிழனின் துயர் துடைக்கும்

**“விலை அல்ல** எம் வாழ்வில் மகிழ்வைத் தருவது
**தரம் மட்டுமே!** நல் வாழ்வைத் தரும்

**AKM Mani Face book page : AKM**

### பரிணாமத் தத்துவம் (Evolution)

இவ்வுலகில் மனிதன் உட்பட அனைத்து உயிர்களும் யாருடைய திட்டமிடலும் இல்லாமல் தாமாக பரிணாமத்தன என்பது அனைவரும் அறிந்ததே. இது எப்படி சாத்தியமானது? பரிணாமம் என்பது அடிப்படையில் மூன்று அடிகளைக் கொண்டது

**வேறுபாடுகளுடனான உயிர்கள் :** ஓர் உயிரினத்தில் பார்ப்பதற்கு அனைத்து உயிர்களும் ஒரே மாதிரியாக இருந்தாலும், அவற்றுக்குள் வேறுபாடுகள் உண்டு. உதாரணமாக ஒரு குருவிக்கு பார்வை சிறப்பாக இருக்கும், இன்னொன்றுக்கு நன்றாக கூடுகட்டத் தெரியும்.

**தகுதியானவை வாழ்கின்றன :** எந்த உயிர்கள் தனது சுற்றச்சூழலுக்கு ஏற்ப தகுதியாக இருக்கிறதோ அவை வாழ்கின்றன. அவ்வாறு இல்லாதவை அழிகின்றன.

**இனப்பெருக்கம் :** அவ்வாறு வெற்றியடைந்தவை அதிக குட்டிகளை ஈனுகிறது.

இந்த மூன்றடுக்கு முறை சுழற்சியில் குருட்டுத்தனமாக இயற்கையில் இயங்குகிறது. இதுதான் ஒரு செல் உயிரிலிருந்து மனிதன் வரைப் படைத்தது. பரிணாமம் என்பது போட்டி என்பது மட்டுமல்ல, ஒத்துழைப்பும் சேர்ந்ததுதான். எந்த உயிர்கள் நன்றாக ஒத்துழைக்கின்றனவோ, அவை வாழ்வதற்கான வாய்ப்பு கூடுவதால்தான் ஒரு செல் உயிரான பாக்டீரியாவிலிருந்து பல்சேல் உயிர்களான தாவரங்களும் விலங்குகளும் தோன்றின. மனித சமூகமே ஒத்துழைப்பினால் உருவானதுதான்.

இந்த பரிணாமத்திற்கு மூன்று முக்கிய பண்புகள் உள்ளது. தெளிவான ஒரு பாதை கிடையாது. பரிணாமம் திட்டமிட்டு பாதை வகுத்து மனிதனை உருவாக்கவில்லை. முன்னேறுவதற்கு அடுத்த உடனடியாக எத்தனை பாதைகள் உள்ளனவோ, அத்தனை வழியாகவும் பயணிக்கும். இவ்வாறுதான் ஒரு செல்லில் உயிர் ஆரம்பித்து இன்று பூமி முழுவதும் ஆழ்கடலில் பல்வேறு உயிர்கள் விரவிக் கிடக்கின்றன. அனைத்து உயிரிகளின் மூலமும் ஒன்றே. இவ்வுலகிலுள்ள மற்ற உயிர்கள் அனைத்தும் நமது மூதாதையர்கள் அல்லது உறவினர்கள். நாம்தான் கடைக்குட்டி.

இவ்வாறு உருவாக்கிய பல பாதைகளில், பெரும்பாலானவை தோற்கும். இதுவரை பூமியில் தோன்றிய உயிரினங்களில் 99% இறந்து விட்டன.

தொடரும் ...



# Swiss Life
Select

சுவிஸ் நாட்டில் உங்கள் காப்புறுதித் தேவைகளுக்காக கணக்கற்ற முகவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால், காப்புறுதி விபரங்களை முறையாகப் பயின்று, மனசாட்சிக்கு விரோதமில்லாமல் பணியாற்றுவோர் ஒரு சிலரே...! அவர்களுள் ஒருவர் உங்கள் திலீபன்.

## சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே!

**அவதானமாகச் செயற்படுங்கள்.**

உங்கள் கடனுக்காக வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்கக் கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு கரங்கோர்க்கும் ஒரேயொரு நிறுவனம்

**அறிவு • நேர்மை • நாணயம்**

தனியொரு காப்புறுதி நிறுவனத்தின் முகவரல்ல நாம். உங்கள் தேவைக்கு ஏற்ப தகுந்த நிறுவனத்தில் நாம் காப்புறுதி செய்து தருகிறோம்

**Sägestrasse 79**
**3098 Köniz**

**Telefon: 031 915 00 50**
**Telefax: 031 915 00 60**
**Handy: 079 889 60 65**

email : krishnasamy.thileepan@swisslife-select.ch
internet : www.swisslife-select.ch

Cicero Member ID 15787
www.cicero.ch

**So fängt Zukunft an.**



Herr Krishnasamy THILEEPAN
Dipl.Finanzberater IAF















# உள்ளம்
## திறக்கும் உண்மைகள்

"உளம் திறக்கும் உண்மைகள்...." என்ற தலைப்பில் உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை 4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.



### முள்ளிவாய்க்கால்

முள்ளிவாய்க்காலில் சிந்திய இரத்தம்
மூவுலகம் கேட்க கதறியது
மூர்க்கம் கொண்ட சிங்கம்
மூட மூடியுமா எம்மை

கால் ,தலை என சிதறியது
கைப் பாவை என நினைத்தான் எம்மை
கூர்மை கொண்ட தமிழர்
கூராய் வருவோம் ஒரு நாள்.....



### ஈழம்

ஈழம் என்பது
மூன்றெழுத்து
ஈரம் போன்று
நனைந்தவர் அல்ல
வீரம் கொண்ட
தமிழர் நாம்
விரைவாய்
நடப்போம் .....

பச்ச மரம் போல்
விழுந்த
எம் இனக் கொடுமை
பட்டுப் போனதுவா?
என்றாய்
பாடம் படிக்கும்
காலம் இது

தவராசா பவானி
பாசல் சுவிஸ்

# அகர கவிக்களம்....



## சிலுவை

தமிழர்கள் பிறக்கும்போதே
சிலுவைகளை அவர்களுக்காகச்
செய்துவைப்பார்களோ
சிங்களர்கள்?!

## தலைவிதி

தீர்ப்பு எழுதியதும்
முறிக்கப்படும் எழுதுகோல்போல
இருக்கிறது
சிங்களத்தின் நல்லாட்சியில்
தமிழர்தம் வாழ்வு

## பாவம் புத்தன்

அரசமரங்களைப் புத்தனின்
இருப்பிடமாக்குகிறார்கள்,
சரிதான்
எந்தச் சிங்களனின் இதயமும்
சுத்தமில்லை
அவரை வைத்திருக்குமளவிற்கு..



## தவறு

தனிநாடு கேட்டார்களென்பது
தவறான மொழியாடல்;
தமிழீழத்திலிருந்து இலங்கையைத்
தள்ளியிருக்கச் சொன்னார்கள்.

## நீதி

ஆயுதங்களை எம்மிடம்
அவர்களே திணித்துவிட்டு,
நாமே ஏந்தியிருந்ததாக
நாற்புறமும் நம்பவைத்தார்கள்,
இப்பொழுது
பிணங்களைப் பேசவைக்க
முயல்கிறார்கள்.



# 'பிரபாகரனியம்'

## குறித்த ஒரு தத்துவப் புரிதல்

ஒரு தத்துவம் - கோட்பாடு - சிந்தனை என்பதன் அடிப்படையை நாம் கவனமாக உற்று நோக்கி உள்வாங்கினால், சில உண்மைகள் தெரியவரும். ஒரு புதிய தத்துவம் ஏற்கனவே உள்ள ஒரு வடிவத்தை பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ சிதைப்பதனூடாகவோ அல்லது அதை முற்று முழுதாக நிராகரிப்பதனூடாகவோ தான் தோற்றம் பெறுகின்றது.

ஆகவே, அந்தப் புதிய தத்துவத்தை முழுமையாக உள்வாங்குவதற்கு, கிரகிப்பதற்கு அந்தத் தத்துவத்தை மட்டும் கற்பதனூடாகவோ, உள்வாங்குவதனூடாகவோ நாம் ஒரு முழுமையை எய்த முடியாது. எனவே, பரந்துபட்ட அறிவும், வாசிப்பும், கற்கையும் நமக்குத் தேவைப்படுகிறது. அதாவது நாம் தேடும் கோட்பாட்டின் தத்துவத்தின் சிதைந்த மூலம் பற்றிய புரிதல் நமக்கு அவசியமாகிறது. நாம் அதைத் தேடும் போது அது வேறு ஒரு கோட்பாட்டின் தத்துவத்தின் சிதைவாய் எமக்கு அறிமுகமாகிறது. அதிலிருந்து இன்னொன்று.....

ஒரு சங்கிலித் தொடராய், ஒரு சிக்கலான வலைப்பின்னலாய் எமது தேடல் தொடர்ந்த வண்ணம் இருக்கிறது. என்றுமே நாம் ஒரு முடிவைக் கண்டடைய முடியாது என்ற பேருண்மை எமக்கு இறுதியில் தெரிய வரும். முடிவில் அது ஒரு பிரபஞ்ச உலகமாய் எமக்குக் காட்சியளிக்கிறது. அதுதான் தத்துவ உலகத்தின் சூக்குமமும்கூட.

முடிவை எய்தாத இந்த தேடல்தான் ஒரு மனிதனை முழுமையாக்குகிறது, மீண்டும் மீண்டும் அவனைப் புதுப்பித்துக் கொண்டேயிருக்கிறது. மனிதன் என்னும் பூகோளப் பிராணியின் பூவுலக இருப்பே இத் தேடலில்தான் மையங் கொண்டுள்ளது. தேடுவதற்கு ஒன்றும் இல்லாத போது நாம் சடங்களாகி விடுகிறோம். வாழ்வின் அர்த்தத்தை இழந்தவர்களாகி விடுகிறோம். மனித இருப்பையும், மனித வாழ்வையும் அர்த்தப்படுத்துவதே இத்தகைய தேடல்தான்.

மனித வாழ்வின் இந்தப் பேருண்மையை ஒரு மனிதன் உணரும்போது அவன் முழுமையடைகிறான். அந்த மனிதன் சார்ந்திருக்கும் இனக்குழுமத்தின் குறிப்பிட்ட விழுக்காடு சதவிகித மனிதர்கள் இந்தப் பேருண்மையை உணரும்போது, அந்த இனமே முழுமையானதாக முற்போக்கானதாக மாறி விடுகிறது.

உலக தத்துவமேதைகள், கோட்பாட்டாளர்கள், சிந்தனையாளர்கள் மனித இனம் குறித்துக் கண்ட கனவு இதுதான். இதன் வழி ஈழத்தமிழ்ச் சமுகம் குறித்து பிரபாகரன் என்ற மனிதர் கண்ட கனவின் வடிவம்தான் 'பிரபாகரனியமாக 'நம்முன் கிடக்கிறது. இசங்களை வெறுத்த, கோட்பாடுகளை குலைக்கும் ஒரு புதிர் நிறைந்த பாத்திரத்தை வகித்த ஒரு அதி மனிதன் நந்திக்கடலில் வைத்து ஒரு கோட்பாட்டை உலகிற்கு விட்டுச் சென்ற கதையின் தத்துவ பின்புலம் இதுதான். ஒரு புரட்சியாளனாக உலகிற்கு அறிமுகமான ஒரு அதி மனிதனை 'நந்திக் கடல்' ஒரு கோட்பாட்டாளனாக மறு அறிமுகம் செய்த கதையும் இதுதான்.

### புரட்சியாளன் - கோட்பாட்டாளன்

தலைவர் பிரபாகரன் தவிர்ந்து, ஈழத்தில் ஆயுதப்போராட்டத்தை முன்னெடுத்த அனைத்து தலைவர்களும் தமது போராட்டத்தை ஏதோ ஒரு வகையில்




உலகின் ஏதோ ஒரு போராட்டத்துடன் அடையாளப்படுத்தும் முனைப்பில் இருந்தார்கள். அந்தந்த போராட்ட தலைவர்களுடன் தம்மை அடையாளப்படுத்தவும் புகுந்தார்கள். ஒரு சில தலைவர்கள் இன்னும் ஒரு படி மேலே போய் அந்தந்த தலைவர்கள் போல் புகைப்படம் எடுத்தும் மகிழ்ந்தார்கள்.

மக்களுக்கும் சீனப் புரட்சி, ரஸ்யப்புரட்சி, தொடக்கம் கியூபா போராட்டம், வியட்னாம் போராட்டம் வரை வகுப்பெடுத்தார்கள். கொம்மியூனிசம், மார்க்கிசம் தொடங்கி உலகின் அனைத்து தத்துவங்களும், கோட்பாடுகளும் அவர்கள் பேராட்டத்தை வழி நடத்துவதாக பறை சாற்றினார்கள். இது தவறல்ல. ஆனால், அவர்கள் தமக்கு என்று தனித்துவமான வழிமுறையை கடைப்பிடிக்காமல், இதற்குள்ளேயே தேங்கி நின்றதுதான் அவர்கள் செய்த வரலாற்று தவறு. அதுதான் பின்னாளில் தமது நோக்கத்தையே மறந்து, அரசுகளின் கைப்பாவைகளாகி அழிந்தும் போனார்கள்.

பிரபாகரன் ஏனைய தலைவர்களிடமிருந்து வேறுபடும் இடம் இதுதான். அவர் தனது போராட்ட வழிமுறைகளை உலக போராட்டங்களிலிருந்தோ, தத்துவங்களிலிருந்தோ தேடவில்லை. மாறாக மக்கள் தொகுதிக்குள் அதை தேடினார். அப்போதே அவர் தனித்துவமான ஒரு கோட்பாட்டை உருவாக்கும் ஆளுமையாக உருவெடுத்துவிட்டார்.

இதன் வழி தனித்துவமான ஒரு புரட்சியாளனாக உலகிற்கு அறிமுகமான பிரபாகரன், நந்திக்கடலில் வைத்து ஒரு நவீன கோட்பாட்டாளனாகவும் தன்னை மறு அறிமுகம் செய்கிறார். முள்ளிவாய்க்கால் வரை புரட்சியாளனாக பயணித்த அவர், நந்திக்கடல் நோக்கி பயணித்தபோதே அந்த வடிவ மாற்றம் நிகழ்ந்து விடுகிறது.

முள்ளிவாய்க்கால் மற்றும் நந்திக்கடல் என்பது, ஒரு கிட்டத்தட்ட ஒரு நிலப்பரப்பை குறிக்கும் இருவேறு பெயர்கள். ஒரு அங்குலம்தான் இந்த இரு நிலத்தையும்






துண்டாடுகிறது. ஆனால் அரசியல் ரீதியாகவும், வரலாற்று ரீதியாகவும் முற்றிலும் வேறுபட்ட செய்தியை இந்த நிலங்கள் பதிவு செய்கின்றன.

பெயருக்கேற்றாற் போல் முள்ளி 'வாய்க்கால்' ஒரு தேங்கிய அரசியலையும், நந்திக்'கடல்' எல்லைகளற்று பரந்து விரியும் அரசியலையும் முன்மொழிகின்றன.

இது புரியாமல் கடந்த ஏழு ஆண்டுகளாக நாம் முள்ளி 'வாய்க்காலோடு' தேங்கி நிற்கிறோம். ஆனால், நாம் விடுதலையை தேட வேண்டிய இடம் நந்தி 'கடலில்' தான் கிடக்கிறது. எமக்கு மட்டுமல்ல, போராடும் இனங்கள் நவீன அரசுகளை எதிர்கொள்ளும் சூக்குமத்தை விழுங்கியபடி 'நந்திக்கடல்' அமைதியாகக் கிடக்கிறது. ஒரு கோட்பாட்டாளன் உருவான கதையின் பின்புலம் இது. வரலாறு "பிரபாகரனியம்' என்று அதை பதிவு செய்து கொள்கிறது.

### நினைவு அழிப்பு அரசியல் = புலி நீக்க அரசியல் = நீதி மறுப்பு அரசியல்

எது 'நினைவு அழிப்பு' அரசியல்? மிக எளிமையாக விளக்கினால் தமிழீழம் என்ற De facto state இன் மூன்று தசாப்த வாழ்வை மக்களின் மன அடுக்கிலிருந்து உருவுதல். அதன் அரசியல் ஒட்டு மொத்த உள்ளடக்கமாக இருப்பது 'புலி நீக்க' அரசியல். அதாவது "புலி நீக்கம் " என்பதனூடாக தமிழத்தேச கருத்தியல்தான் அழிக்கப்படுகிறதேயொழிய "புலி" என்ற அமைப்பியல் அல்ல. தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்ற எமது அரசியல் அவாவை வெல்வதன் பின்னணியில் அதன் அடிப்படையான இனம், மொழி, பண்பாடு, நிலம் என்ற அடையாளங்கள் இருக்கின்றன. மீண்டும் மீண்டும் பேசப்படுகிற ஒரு விடயமாக இது இருக்கிறது. இந்த அடையாள அழிப்பே முள்ளிவாய்க்காலின் பின்னணயில் இருந்தது.

தற்போது எமக்கான நீதியை முற்றாக குழி தோண்டிப் புதைக்க 'புலிகள்'; என்ற கருத்தியலும், அவர்களின் சித்தாந்தமும் 'நினைவு அழிப்பு' அரசியலினூடாக தமிழ் பரப்பிலிருந்து நீக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதைத்தான் நாம் 'புலி நீக்க' அரசியல் என்கிறோம்.

இந்த 'புலி நீக்க' அரசியலை நாம் ஏன் தொடர்ந்து எதிர்க்கிறோம்? என்பதன் மிக எளிமையான விபரணம் இதுதான். "புலி" என்ற குறியீட்டு பதத்தை தமிழ் பரப்பில் நாம் தொடர்ந்து நிறுத்துவது ஆயுதப்போராட்டத்தை முன்னகர்த்த அல்ல. (அது நீண்டகால நோக்கில் ஒரு உதிரிக்

காரணமாக இருப்பதை நாம் மறுக்கவில்லை) இந்த 'நினைவு அழிப்பு' அரசியலுக்கு எதிர்வினையாக, எமது இனத்தின் அரசியல் உள்ளடக்கத்தை தொடர்ந்து பேண நாம் எடுத்துள்ள அரசியல் நடவடிக்கையின் ஒரு பகுதியாகும். தமிழின அழிப்பினூடாக புலிகளை அழித்த மேற்குலக, பிராந்திய சக்திகள் புலிகளை பயங்கரவாத பட்டியலில் தொடர்ந்து வைத்திருக்கும் பின்புலமும் இதுதான்.

'பிரபாகரனியம்' என்பது புலி என்ற அமைப்பு சார்ந்த தர்க்கம் அல்ல.. எமது நீதிக்கான கருவி அது. 30 வருட காலமாக நாம் வாழ்ந்த 'நடைமுறை அரசு' குறித்த தத்துவார்த்த பொருளடக்கம் அது. ஒரு தேசம் குறித்த உண்மை அது. 'பிரபாகரனியம்' இதை இன்னும் உரத்து பேசும். விடுதலைக்கான கோட்பாடுகளை கட்டவிழ்க்கும்..

### தேசிய இனங்களின் வழிகாட்டி

2009 தமிழின அழிப்பிற்கு பிற்பாடு புலிகளின் போராட்ட வழிமுறைகளும், அவர்கள் அனைத்துலக சதிகளினூடாக அழிக்கப்பட்ட பிராந்திய பூகோள அரசியலும், அரச பயங்கரவாதத்தை மையப்படுத்திய "சர்வதேச உறவுகளும்" தலைவர் பிரபாகரன் குறித்த வேறொரு அரசியல் பரிமாணத்தை, உலகளவில் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டம் சார்ந்து எழுதியிருக்கிறது. அது "பிரபாகரனியம்" என்ற விடுதலைக் கோட்பாடாக கட்டவிழ்ந்து, ஒடுக்கப்படும் இனங்களுக்கான ஒரு விடுதலைக் கோட்பாடாக முகிழ்ந்திருக்கிறது.

எனவே, நாம் இனி அவரை தமிழர்களுக்கு மட்டும் பொதுவான தலைவராக குறுக்குவது அரசியல் ரீதியாகவும், கருத்தியல் ரீதியாகவும் தவறானது. உலகெங்கும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் வழிகாட்டியாக வரலாறே அவரை உருவகித்திருக்கிறது. வரலாறு என்பது அதன் போக்கில் எழுதப்படும் என்பது ஒரு இயங்கியல் விதி.

### தனி மனித அரசியல்

'தேசியத் தலைவர் பிரபாகரனின் இடத்தையும், அவர் வகிக்கும் வரலாற்றுப் பாத்திரத்தையும் நாம் என்றென்றைக்கும் புறம் தள்ள முடியாது. இனி வரும் ஈழத்தமிழர்களின் காலம் என்பது பிரபாகரன் என்ற பெயரோடு இரண்டறக் கலந்ததாகவே இருக்கும். பல்லாயிரம் நூற்றாண்டுகளுக்கு பின்னரும் கூட தமிழர்களின் சுதந்திரம், விடுதலை,



சுவிஸ் நாட்டின் மாபெரும் ஜுவலரி சாம்ராஜ்யம்

# NS Jewellery & Textiles



தாலி மற்றும் பொன்னுருக்குதல், இவையாவும் இங்கு செய்து தரப்படும்

ஒவ்வொரு வருடமும் தைமாதம் எமது ஸ்தாபனத்தால் தங்கநகை சேமிப்புத்திட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது. மாதம் 100 CHF என 12 மாதம் 1200 CHF இணைய விரும்புவோர் உங்களது பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்யலாம்.

Neugasse 58, 8005 Zürich, Switzerland
www.nsjewellery.com

nfo@nsjewellery.com Tel: 044 440 60 50 Fax: 044 440 60 52

GUARANTEE BEST PRICE GUARANTEE

உயர்தர புடவைகள் மற்றும் துணி வகைகள் வாங்க சிறந்த இடம்



Rani palace

044 440 60 52
ranipalace60@gmail.com

Tel : 044 440 60 52

Neugasse 60, 8005 Zurich - Switzerland

இறைமை என்பதை தீர்மானிக்கும் ஒற்றைச் சொல் பிரபாகரன் என்பதாகவே இருக்கும். ஏனெனில் ஒரு இனத்தின் விடுதலை, சுதந்திரம், இறைமை சார்ந்து உள்ளும், வெளியுமாக அவர் உருவாக்கியிருக்கும் கோட்டுருவாக்கச் சித்திரங்கள் அசாதாரணமானது. அது ஒரு தொடர் கூட்டு உளவியல் தொடர்பானது. அது ஒரு இனத்தை காலத்திற்கு காலம் இயக்கக்கூடியது மட்டுமல்ல, என்றென்றைக்கும் சேர்ந்து பயணிக்கக் கூடியதும் கூட.

தனி மனித வழிபாடு, தனிமனித அரசியல் என்பவற்றிற்கும் அப்பால் பிரபாகரன் என்ற பெயர் தமிழ்ச் சமூகத்தில் ஏற்படுத்தியிருக்கும் அதிர்வுகளை எமது ஆய்வினூடாக துல்லியமான உளவியல் வரைபடமாக வரைந்தோம். பிரபாகரன் தமிழச் சமூகத்திற்கிடையிலான உளவியல் வரைபடத்தை கிரமமாக உள்வாங்காத, இது குறித்த புரிதலில்லாத எத்தகைய அரசியல் நடவடிக்கைகளும் ஈழவிடுதலையை சாத்தியமாக்காது என்பதுடன், அவை மக்களின் மனநிலையிலிருந்து சிந்தித்துத் தோற்றம் பெற்றவையாகவும் இருக்க முடியாது என்பதே எமது ஆய்வின் மிக முக்கியமான முடிவு.

முப்பது வருடங்களுக்கும் மேலாக ஒரு இனம் படிப்படியாக வளர்த்த நம்பிக்கையும், அரசியல் அவாவும் புலிகளின் வளர்ச்சியோடு பின்னிப் பிணைந்தது. அதன் பெரும் பிம்பமாகப் தலைவர் பிரபாகரனை அந்த இனம் வரித்து நீண்ட காலங்களாகி விட்டது. இதை உளவியல் மொழியில் கூறினால் ஒவ்வொரு தமிழனது உள்ளத்தில் அவர்களது அரசியல் அவா பிரபாகரன் என்ற உருவத்திலேயே ஆன்மாவாக உறைந்து கிடக்கிறது.

தேசம், தேசியம், தேசியத் தலைவர் என்று ஓர் இனம் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக ஒரு வாழ்வை வாழ்ந்துவிட்டது. அந்த வாழ்வியலினூடாகவே அந்த இனத்தின் உளவியல் கட்டமைக்கப் பட்டிருக்கிறது. “பிரபாகரனியம்” என்ற நவீன விடுதலைக் கோட்பாடு ஒன்று, அவரிலிருந்து வெளிக் கொணரப் பட்டுள்ளதன் பின்புலம் இதுதான்.

### ‘நந்திக் கடல்’

உலக பயங்கரவாத அரசுகள், அதை தாங்கும் பெரு முதலாளிகள், நிறுவனங்கள், அமைப்புக்கள் வகுத்து வைத்திருந்த உலக ஒழுங்கை நிர்மூலம் செய்து, உலகில் ஒடுக்கப்பட்டு, அடக்கப்பட்டு, அல்லலுறும் இனங்களுக்கான விடுதலைக்கோட்பாடு பிரசவிக்கப்பட்ட இந்த நூற்றாண்டின் தாய்ச் சமர்க்களம்.

பற்றைகளும், புற்களும், சேறும், சகதியும் நிறைந்த ஒரு வறண்ட நிலப்பரப்பு ஒரு வரலாற்று நாயகனை ‘உள்வாங்கி’ ஒரு நவீன விடுதலைக் கோட்பாட்டை வெளித் தள்ளியது. போராடும் இனங்களுக்கான படிப்பினையும், பாடமும் மட்டுமல்ல வழிகாட்டியுமாக, உலக ஒழுங்குக்கு சவாலாக, அச்சமாக, எல்லாமுமாக அது அந்த மண்ணிலிருந்து வெளித் தள்ளப்பட்டது. வரலாறு ”பிரபாகரனியம்’ என்று அதை பதிவு செய்து கொள்கிறது.

**நன்றி : ஆய்வாளர் பரணி கிரிஸ்ணரஜனி**


THOOYA COMMUNICATION






Lyca TV

BOX எம்மிடம் கிடைக்கும்

Rheinische Str 80
44137 Dortmund

**Swiss, Zürich மாநிலத்தில் புதியதோர் உதயம்**

# வரசித்தி மஹால் மண்டபம்

சகலவிதமான மங்கள வைபவங்களை மகிழ்ச்சியாகவும், தரமாகவும், நேர்த்தியாகவும் உங்களின் விருப்பத்திற்கு ஏற்ற விதத்தில் அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில் மனம் கவர்ந்த ஒரே அழகிய மண்டபம்...






திருமண விழா, நீராட்டு விழா, பிறந்தநாள் விழா அனைத்து வைபவங்களுக்குமான சைவ, அசைவ உணவு வகைகளை அறுசுவையுடன் சுவிஸின் அனைத்து பாகங்களுக்கும் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்



**800 இருக்கை வசதியும்**
**400 வாகன தரிப்பிடமும்**
**கொண்ட மண்டபம்**

**Hüttenwiesenstrasse 6, 8108 Dällikon, Zürich, Switzerland**

| K.KOWTHAMAN | S.MANIVANNAN | K. VIJAYASURESH |
|---|---|---|
| 079 317 82 36 | 079 128 55 61 | 079 275 68 62 |

web : www.varasithy-mahall.ch  mail : vasasithymahall@hotmail.com

# எதிர்காலத்தை பாதுகாக்க....!



- வருமானக் காப்புறுதி
- வாகனக் காப்புறுதி
- மருத்துவக் காப்புறுதி
- சேமிப்புக் காப்புறுதி
- வீட்டுக் காப்புறுதி
- ஆயுட் காப்புறுதி
- சட்டக் காப்புறுதி
- வீட்டுக்கடன்
- தனிப்பட்ட கடன்

**Srithas Murugapathamarajah**

**00491788482965**



**EINER FÜR ALLE,**
**ALLE FÜR EINEN**



# என்ன கொடுமை சரவணா!...

கல்லெறி வேலுப்பிள்ளை



## வணக்கம் பாருங்கோ, எப்பிடி இருக்கிறியள்?

**இனம் இனத்தைச் சேரும் எண்டு வாயளவில மட்டும்தான் எங்கட ஆக்கள் சொல்லுறதுண்டு. செயலில இல்லை பாருங்கோ. இந்த மாதத்தில எங்கட இனத்தைக் கொன்று குவிச்ச சிங்களவன் அதை வெற்றி நாளாகக் கொண்டாடுறான் பாருங்கோ. ஆனால் எங்கடயளுக்கு கொஞ்சம் கூட அந்த அழிவில இருந்து மீண்டெழ வேண்டும் என்றது மண்டக்க இல்லைப் போல கிடக்கு. ஏன் சொல்லுறன் எண்டால் பாருங்கோ, போனகிழமை நடந்த கிரிக்கெட் போட்டியில உடனுக்குடன துடுப்பாட்ட விபரத்தை முகநூலில போடுற பெடியொண்டைப் பார்த்தன் கண்டியளோ.**

ஆள் அடிக்கடி தேசியம், தமிழீழம் எண்டு வாய்க்கு வாய் மெல்லுற ஆளாய் இருந்தவர். கொஞ்சநாளைக்கு முதலிருந்து ஆள் மாறீட்டுது. நாள் போகப் போக சிங்களம் செய்ததெல்லாத்தையும் மறந்து "முள்ளிவாய்க்கால் எண்டால் என்ன.." எண்டு கேக்குற நிலைமை வந்தாலும் வரும் எண்டுறதுக்கு உந்தத் தம்பி நல்ல உதாரணம் பாருங்கோ.

உதுமாதிரித் தான் பாருங்கோ, இஞ்சயும் எல்லா இடங்களிலையும் உப்பிடித்தான் நடக்குது கண்டியளோ. எங்கட மண்ணைக் காக்குறம் மக்களைக் காக்குறம் எண்டு 2009 க்குப் பிறகு ஓடின பலரில இப்ப சிலரின்ர முகவரியையே காணேல்லை பாருங்கோ. அதுகூடப் பரவாயில்லை. ஆனால் இப்பவும் தலைவரின்ர பெயரையும் இயக்கத்தின்ர பெயரையும் உபயோகித்தபடி உழைக்கிற கூட்டம் இன்னும் அதை உணர்ந்ததாகத் தெரியேல்லை பாருங்கோ.

இனப்படுகொலை நடந்து பத்து வருசம் ஆகீட்டுது. ஆனால் அதையும் "பத்து வருசம்" எண்ட வருட நிறைவு மனப்பான்மையிலதான் எங்களில பலர் பாக்குறமே தவிர, பத்துவருசமாகியும் நாங்கள் அப்படியே தான் இருக்கிறம் எண்டு வெக்கப்படுற, வேதனைப்படுற நிலையில யாரும் இல்லை பாருங்கோ. உந்தக் கேவலத்தில நாங்கள் ஒற்றுமையைப் பற்றி வேற கதைக்கிறம் எண்டதுதான் பெரிய சோதனை கண்டியளோ.

விசயம் என்னவெண்டால் பாருங்கோ, நடந்து முடிந்த இனப்படு கொலையை, உலக ஒழுங்கை நிர்ணயிக்கிற யாரும் இன்னும் ஏற்றுக் கொள்ள வில்லை எண்டுறதுதான் உண்மை.

காரணம்; அதற்குரிய முழுப் பணியிலையும் எங்கட ஆக்கள் ஈடுபடேல்லை பாருங்கோ. இன்னும் எங்கடா தேத்தண்ணி விக்கலாம் எண்டுறதும், எங்க கொத்துரொட்டி போடலாம் எண்டுறதும்தான் எங்கட ஆட்களுக்கு முழுமுதல் யோசனை. ஆனால் அதைக்கூட சரியாக கணக்கு எழுதிச் செய்யுறதில்லை . அது இண்டைக்கு பாரிய பிரச்சனையாகி உங்கினை முகநூல் வழியாகவும், குறுஞ்செய்திகளாகவும் பழைய பற்றுச்சீட்டுகள் வெளிவாற அளவுக்குப் பூதாகாரமாக மாறீட்டுது கண்டியளோ.

கணக்கை கணக்காக எழுத்தாட்டில், கணக்கே கணக்காக வந்து எங்களின்ர வாழ்க்கையில கணக்குப் போட்டுவிட்டுப் போயிரும் எண்டுறமாதிரி, 2009 இற்குப் பிறகு சரியான முறையில கணக்கு வழக்குகள் எழுதப்படாமையும், மக்களுக்குத் தெளிவுபடுத்தப் படாமையும் தான் இண்டைக்கு இஞ்ச உள்ள பெரிய பிரச்சனை பாருங்கோ. ஏன் கணக்கை வெளிப்படையாகக் காட்ட முடியாமல் உள்ளது என்ற கேள்விக்கு இரண்டே பதில்தான் பாருங்கோ. ஒன்றில், காசு யாருக்காவது அனுப்பப்பட்டிருந்தால் அவர்களுடைய உண்மைப்பெயர் முகவரி தெரியாமல் இருக்கவேணும் அல்லது, இஞ்ச சேர்த்த காசின்ர முழுத்தொகையும் எங்கேயும் அனுப்பப் படாமல் இருந்திருக்கவேணும். இதில ஏதாவது ஒண்டுதானே நடந்திருக்க வேணும். இதில எந்தப் பதிலைச் சொன்னாலும் சனம் கேள்வி கேட்கும் என்ற பதட்டம்தான் இந்த நிலைக்குக் காரணம் பாருங்கோ.

உந்தப் பதட்ட நிலைமையை உண்டாக்குறதுக்காக 2009 இற்கு முதல் மக்கள் போராட்டத்துக்கு வழங்கிய பங்களிப்பு எல்லாத்தையும் ஆதாரத்தோட வெளியில செய்திகளாக அனுப்புறது அது எவ்வளவு தவறான விசயம் சொல்லுங்கோ பாப்பம். ஆனால் அதை ஒரு கூட்டம் செய்யுது. விடுதலைப் போராட்டத்தின்ர ஒவ்வொரு செயற்பாடும் எவ்வளவு இரகசியமாக இருக்கவேணும் எண்டுறதில இயக்கம் வெகு கவனமாக இருந்தது கண்டியளோ.

ஆனால் இஞ்ச பற்றுச்சீட்டு தொடங்கி, கடிதங்கள் வரைக்கும் வெளியில வருகுது. அது எப்பிடி எங்க இருந்து வருகுது எண்டு இப்ப பருப்பாளர்களாக இருக்கிற யாருக்கும் தெரியேல்லை. அதை எப்பிடியாவது தடுத்து நிறுத்தவேணும் எண்டுற எண்ணமும் அவைக்கு இல்லை. உந்தக் கேவலத்தில எப்படி இவங்களால நெஞ்சை நிமித்திக் கொண்டு திரிய முடியுதோ தெரியேல்லை பாருங்கோ.

உப்பிடியான பற்றுச்சீட்டுகளை வெளியில பரவவிடுற ஆக்கள் உண்மையில போராட்டத்தைக் கட்டிக்காக்கிற ஆட்களாக இருக்க வாய்ப்பில்லை. அது ஒருபுறமிருக்க, வெளியில வாற பற்றுச்சீட்டுகளை வைச்சு பார்க்கும்போது எவ்வளவு தூரம் தலைவரின்ர பெயரைச் சொல்லி இஞ்ச உள்ளவர்கள் தங்களது சட்டைப்பையை நிரப்பியிருப்பினம் எண்டுறது தெளிவாத் தெரியுது பாருங்கோ. மாவீரர் நாள் மண்டபத்தின்ர கூலி இருபதாயிரம் எண்டுதான் பொதுவா ஒரு கணக்கு எழுதியிருக்கும். ஆனால் உண்மையான பற்றுச்சீட்டில மூவாயிரம் எண்டு எழுதிகிடக்கு கண்டியளோ.

அதோடயே எனக்கு ஐஞ்சும் கெட்டு அறிவும் கெட்டுப் போட்டுது பாருங்கோ. உப்பிடியான ஆக்களால தானே எங்கட போராட்டம் பெரிய பாதிப்பைச் சந்திச்சது பாருங்கோ. சரி சுத்துசுத்தெண்டு சுத்தி, தலைவருக்கு ஒரு கணக்கும், மக்களுக்கு ஒரு கணக்கும் காட்டி எல்லாத்தையும் சிதைச்சாச்சு. இப்பவாவது அங்க உள்ள சனத்துக்கு முழுப் பங்களிப்பையும் செய்ய முயற்சிக்கிறாங்களோ எண்டால் இல்லை கண்டியளோ.

தாங்கள் தான் செய்யாட்டிலும் பறவாயில்லை, மற்றவனையும் விடாங்கள் எண்டுறது தான் மிகப்பெரிய கேவலம் பாருங்கோ.

அப்பிடித்தான் பாருங்கோ, இரண்டு வருசத்துக்கு முதல் ஒருமுறை ஊரில அதீத மழையால பயங்கர வெள்ளம் கண்டியளோ. அதைப்பார்த்து பதைபதைச்ச ஒருசில




நண்பர்கள் சேர்ந்து கொஞ்சப் பணத்தைச் சேர்த்து ஊருக்கு அனுப்பலாம் எண்டு முடிவு செய்திருக்கினை. ஆர் ஊடாக அனுப்பலாம் எண்டு யோசிச்சால், அரசாங்கத்தோட கூட்டுச் சேராமல் ஓரளவுக்கு தனித்து நின்று குரல் கொடுக்கிற ஒரு அரசியல் கட்சியின் செயலாளர் ஊடாக அனுப்பலாம் எண்டு முடிவு செய்து அவரோட தொடர்புகொள்ள, அவரும் சம்மதம் தெரிவிச்சிட்டார்.

சரியெண்டு உடனே காசை அவருக்கு அனுப்பிப்போட்டு, எங்களுடைய தொண்டுநிறுவனம் ஊடாக அனுப்பியதாக ஒரு ஒளிப்பதிவு செய்து அனுப்பினால் இங்கே அதை நம்பிக்கைக்குரிய அடையாளமாகக் காட்ட முடியும் என்று நண்பர் கேட்டிருக்கிறார். அவரும் அதுக்கு ஓமெண்டிருக்கிறார். இரண்டு நாளைக்குப் பிறகு அவரே திருப்பி அழைச்சாராம். என்ன விசயமெண்டு நண்பர் கேட்டிருக்கிறார். உங்களிட்ட எந்த உதவியும் வாங்க வேண்டாம் எண்டு உங்கட நாட்டில இருக்கிற விடுதலை வீரர்கள் எங்களுக்கு முட்டுக்கட்டை போடுகினம் எண்டு ஆள் சொல்லி இருக்கு. என்ன காரணம் எண்டு வினவினால், நீங்கள் அவையளிட்ட அடிக்கடி கணக்குக் கேட்டுக் குடையுறனீங்களாம்.

அதால உங்களிட்ட உதவி எதுவும் வேண்டவேண்டாம் வேண்டும், உங்கட தொண்டு நிறுவனத்தின்ர பெயரை பாவிக்கவேண்டாம் எண்டும் எங்களுக்கு அறிவித்தல் வந்திருக்கு எண்டு செயலாளர் பரிதாபமாகச் சொல்லி இருக்கிறார். வெள்ளத்தால பசி பட்டினியில் கிடக்கிற சனத்துக்கு உதவி செய்யுறதுக்குக் கூட, இவையின்ர அனுமதி இல்லாமல் செய்யக்கூடாது எண்டால் உவைக்கு என்ன செய்யலாம் எண்டு நீங்களே சொல்லுங்கோ பாப்பம். அடேய் செம்மறிக் கூட்டமே, இந்தப் பத்துவருசத்தில நீங்கள் என்ன அந்த மண்ணுக்குச் செய்திருக்கிறியள் எண்டு துணிஞ்சு வெளியில காட்டுங்கோ பாப்பம். ஒரு கோதாரியும் இல்லை. சும்மா பேருக்கு வெள்ளைச் சட்டையை மாட்டிக்கொண்டு திரிஞ்சால் போதும் எண்டு அலையுற உங்களுக்கு எங்கேயடா சனத்தின்ர கவலை தெரியப்போகுது..?

என்ன உதவி போனாலும் உங்கட கவட்டுக்காலதான் போகவேணும் எண்டுறது என்ன தீர்ப்பு எண்டு தெரியேல்லை. ஒரு இனத்தின்ர பிரதிநிதிகளாக இயக்கமும் தலைவரும் இருக்கும்போது மக்களுக்கு ஒரு பிரச்சனை எண்டால் அவையள் பாப்பினம் எண்டு சனத்துக்கு தெரியும். ஆனால் நீங்கள் மக்களின்ர பெயரைச் சொல்லி, இயக்கத்தினரை பெயரையும் வித்துக்கொண்டு கையில கிடக்கிறதெல்லாத்தையும் உங்கட பையில போட்டதின்ர சுத்துமாத்தெல்லாம் இப்ப ஆரோ குறுஞ்செய்தியில வெளியில விடுறாங்கள். ஐயோ பாருங்கோ, கத்தை கத்தையா எனக்கு வாற செய்திகளை வாசிக்க நேரம் போதேல்லை பாருங்கோ.

பத்து வருசம் ஆகீட்டுது எண்டு அதுக்கு ஒரு மாநாடு கூட்டி தீர்மானம் நிறைவேற்றி இருக்கினமாம், ஏதோ இனியாவது செய்யப்போறாங்கள் போல கிடக்கெண்டு என்ர நண்பர் ஒருத்தரிட்டச் சொன்னன். நண்பர் சிரிச்சுப் போட்டு என்ன சொன்னார் தெரியுமே..? இனி இருபதாவது வருசம் வரும் வரைக்கும் எப்பிடி காலத்தை ஓட்டுறது எண்டு திட்டம் போடுறதுக்குத் தான் உந்த மாநாடாம் எண்டார். அப்ப இனியும் திருந்திறதா இல்லையோ எண்டன். உவங்கள் திருந்துற நேரம் நாங்கள் ஊரில எல்லாம் சிங்கள மயமாகீடும் எண்டுறார் என்ர நண்பர்.

“வடகோடிங் குயர்ந்தென்னே,
சாய்ந்தா லென்னே,
வான்பிறைக்குத் தென்கோடு” பார்மீ திங்கே
விடமுண்டுஞ் சாகாம லிருக்கக் கற்றால்,
வேறெதுதான் யாதாயின் எமக்கிங் கென்னே?
திடங்கொண்டு வாழ்ந்திடுவோம்,
தேம்பல் வேண்டர்
தேம்புவதில் பயனில்லை, தேம்பி தேம்பி
இடருற்று மடிந்தவர்கள் கோடி கோடி
எதற்குமினி அஞ்சாதீர் புவியி லுள்ளீர்!

- அப்ப வரட்டே


# MEERHAA AYURVEDA

GESUNDHEITS PRAXIS

Panchakarama Treatment Ayurvedic Beauty SPA

MEERHAA AYURVEDA MA

DR. SASHIMEERA SIVARASALINGAM

Tel. 076 426 34 44

INDIAN AYURVEDA THERAPIE



உங்கள் உடலில் ஏற்படும்
வலிகள், நோக்கள்
என்பவற்றிலிருந்து
விடுதலை அடைந்து
மகிழ்ச்சியான வாழ்வை
வாழ்வதற்கு எம்மை நாடுங்கள்

- Kopfschmerzen (Migrane)
- Depressionen
- Muskelverhärtungen
- Arthrose
- Allergie
- Diabetes
- Bluthochdruck
- Schlafstörungen
- Mudigkeit

Krankenkasse Wädenswil SWICA sanitas INTRAS ASSURA rhenusana sympany FKB Groupe Mutuel

கவலை வேண்டாம் உங்கள் மருத்துவக் காப்புறுதி
ஊடாக கட்டணம் செலுத்தலாம்









meena_1882@hotmail.com www.meerhaaayurvrda.ch

KRANKENKASSE ANERKANNT

முறைப்படி ஆயுர்வேத சிகிச்சை படித்தவர்களால்தான் வைத்தியம் பார்க்கப்படுகிறது.

Kanzleistrasse 115, 8004 Zurich. Natel : 076 426 34 44



# நான் தெள்ளியவோர் முழுச்சவிக்கி

தேவன்

**இது ஒரு மிகப்பிரமாண்டமான மனிதாயத் துயரம். உலகம் முன்னோக்கிப் பார்க்க வேண்டும். ஏற்கெனவே காலம் தாழ்த்தியாகி விட்டது**

இது தமிழின அழிப்பு உச்சமாக நடைபெற்ற மாதமாகும். மனிதகுல வாழ்விற்கு முற்றிலும் முரண்பாடான ஒரு சமுதாயத்தை அரசாகக் கொண்ட இலங்கையின் இராணுவம், தமிழ்மக்கள் மீது மேற்கொண்ட அந்த உச்சகட்ட இன அழிப்புப் பற்றி உலக அரங்கின் பல பிரபல பத்திரிகைகள் வாய் திறக்கவில்லை. ஆனாலும், இந்தியாவிலிருந்து அருந்ததி ராய் என்ற பெண் பத்திரிகையாளர் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையொன்று, மிகவும் அப்பட்டமாக ஈழத்தில் இன அழிப்பு நடைபெறுகிறது என்பதை புடம்போட்டுக் காட்டியிருக்கிறது. அதைத் தமிழில் உங்களுக்காகத் தருவது பொருத்தமாக விருக்கும். ஏனெனில், அன்று எழுதப்பட்ட இந்தக் கட்டுரை இன்றும் பொருத்தமாகவே இருக்கிறது. அழிப்பின் விகிதம் குறைந்திருக்கிறதே தவிர, தமிழின அழிப்பு இன்றும் அங்கு நிகழ்ந்து கொண்டுதானிருக்கிறது.

படுகொலைகள் தொடர்ந்து கொண்டிருக்கும் போது, இன வதை முகாம்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அடைத்து வைக்கப்படுகிற போது, இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பட்டினியால் மரணத்தை எதிர்நோக்கும் போது, ஒரு இனப்படுகொலை நடக்க இருக்கும்




For satellite news, live radios, TV-Guide,
Radio-schedules,
contact details of Tamil channels in the world etc.
www.mediaasia.in

போது, ஒரு மாபெரும் தேசம் மரண அமைதி காக்கிறது. இலங்கையைச் சூழ உள்ளவர்களது மௌனம், அங்கு பயங்கரம் படிப்படியாக அதிகரித்து வருவதற்குக் காரணமாக இருக்கிறது. இந்தியாவின் பிரதான ஊடகங்களில் அது பற்றிய எவ்வித அறிக்கைகளும் வெளியாவதில்லை. உண்மையில் சர்வதேச ஊடகங்களிலும் நிலைமையும் அவ்வாறு தான் உள்ளது. அங்கு என்ன தான் நடைபெறுகிறது? அவை பற்றி நாம் ஏன் அதிக கவனம் செலுத்த வேண்டும்?

அங்கிருந்து வடிகட்டப்பட்டு வெளிவரும் செய்திகளினூடாக இலங்கை அரசாங்கம், பயங்கரவாதத்திற்கெதிரான போர் என்ற பெயரில் நாட்டின் ஜனநாயகத்தையே சிதைத்து, அழித்து வருவதை அறிய முடிகிறது. அது மட்டுமல்லாமல், தமிழ் மக்கள் மேல் சொல்லுந்தரமற்ற குற்றங்களைப் புரிந்து வருகிறது.

அவனோ, அவளோ தாம் பயங்கரவாதி அல்ல என்று நிரூபிக்காத வரை, ஒவ்வொரு தமிழரும் 'பயங்கரவாதி' என்ற அடிப்படையிலேயே அரசாங்கம் போரை நடாத்தி வருகிறது. மக்கள் வாழிடங்கள், வைத்திய சாலைகள் மற்றும் பாதுகாப்புக்காகத் தங்கியிருக்கும் இடங்கள் என்பனவற்றின் மீது குண்டுகளை வீசி வருகிறது. இலங்கை இராணுவத்தனர் டாங்கிகளுடனும், விமானப் படையினரின் உதவியுடனும் முன்னேறி வருகின்றனர். இரண்டு இலட்சம் மக்கள் இந்தப் போர்ப் பிராந்தியத்துள் அகப்பட்டுள்ளதாக நம்பத்தகுந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் வீடிழந்த மக்களுக்காக, நலன்புரிக்கிராமங்கள் உருவாக்கப் பட்டுள்ளதாக உத்தியோக பூர்வத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பெப்.14ஆம் திகதிய டெய்லி ரெலிகிராபின் அறிக்கையின் படி போர்ப்பிராந்தியத்திலிருந்து தப்பி வரும் எல்லா மக்களையும் கட்டாயப் படுத்தித் தங்க வைப்பதற்கான இடங்களாக இவை இருக்கின்றன. இவை மறைமுகமான இனவதை முகாம்களா?

அரசாங்கம் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தல் என்று கூறி, சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் உள்ள எல்லாத் தமிழர்களையும் பதிவு செய்யும் வேலையை ஆரம்பித்தது. இது 1930களின் நாசிகள் செய்ததைப் போன்று வேறு நோக்கங்களுக்கானது என்பதை வெளிப் படுத்துகிறது என முன்னாள் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர டெய்லி ரெலிகிராப்க்குத் தெரிவித்திருந்தார். இதனூடாக எல்லாத் தமிழர்களும்




இயல்பாகவே பயங்கரவாதிகள் என்று அவர்கள் முத்திரை குத்தப்படப் போகிறார்கள் என்றும், அவர் தெரிவித்திருந்தார்.

விடுதலைப் புலிகளைத் துடைத் தழிப்பது தான் இதன் நோக்கம் என்று கூறப்பட்டாலும் கூட, மக்கள் மீது அல்லது பயங்கரவாதிகள் என்று கூறப்படுபவர்கள் மீது மேற்கொள்ளப்படும் பிறருக்கு, அனர்த்தம் விளைவிக்கும் தீய எண்ணம் கொண்ட இந்த அழிப்பு நடவடிக்கை, இலங்கை அரசாங்கம் இறுதியில் இனப்படுகொலையை நோக்கியே நகர்கிறது என்பதையே கோடி காட்டுகிறது.

ஐ.நாவின் கணிப்பின்படி ஏற்கெனவே பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப் பட்டுள்ளனர். ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் மிக மோசமாகப் படுகாயமடைந்துள்ளார்கள். அந்த நரகத்தின் பயங்கரம் பற்றி விபரிக்கும் ஒரு சில கண்கண்ட சாட்சியங்கள் வெளி வந்துள்ளன. நாங்கள் எவற்றுக்குச் சாட்சியாக இருக்கிறோம்? இலங்கையில் என்ன நடைபெறுகிறது? என்று திட்டமிட்டு மறைக்கப் படுகிறது. நாங்கள் அதனை ஒரு இனரீதியான போர் என்று சொல்லலாமா? எந்தவிதமான தண்டனைகளுக்கும் அகப்படாமல், இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் இந்தக் குற்றச் செயல்கள் உண்மையிலேயே மிகப் பார தூரமான இனப்பாகுபாட்டு நடவடிக்கைகளே!. இவை இலங்கையில் உள்ள தமிழர்களை அவர்களுடைய இடத்திலிருந்து முற்றாகவே ஓரம்கட்டி விடுகிற, அந்நியப்படுத்திவிடுகிற நடவடிக்கைகளாகும்.

சமூக ஒடுக்குமுறை, சித்திரவதை, பொருளாதாரத்தடை என இனவாதத்திற்கு ஒரு நீண்ட வரலாறே உண்டு. இந்தத் தசாப்தத்தின் நீண்ட உள்நாட்டுப் போர் அமைதியாக, வன்முறையற்ற எதிர்ப்புடன் தான் ஆரம்பமாகியது. ஏன் இந்த மௌனம்? என்ற மங்கள சமரவீரவின் இன்னொரு நேர்காணலில், சுதந்திர ஊடகம் என்பதை இன்று இலங்கையில் காண முடியாது என்கிறார் அவர்.

சமூகத்தை அச்சத்துள் உறையச் செய்திருக்கும் வெள்ளைவான் கடத்தல்கள் மற்றும் கொலைக் குழுக்களைப் பற்றியும், அந்த நேர்காணலில் மங்கள சமரவீர பேசுகிறார். மாற்று அபிப்பிராயங்கள் கொண்ட பல்வேறு ஊடகவியலாளர்கள் கடத்தப் பட்டிருக்கிறார்கள், அல்லது காணாமல் போயிருக்கிறார்கள். ஊடகவியலாளர்களை மௌனமாக்க அல்லது காணாமல் போகச் செய்ய இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத்திற் கெதிரான சட்டத்தைப் பாவிப்பதாக சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பு (*IFJ*) குற்றம் சாட்டியிருக்கிறது.



மனிதத்திற்கெதிரான இலங்கை அரசின் இந்தக் குற்றவியல் நடவடிக்கைகளுக்கு, இந்திய அரசாங்கம் இராணுவ உதவிகளையும், உபகரணங்களையும் வழங்கி வருவதாக உறுதிப் படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன. உண்மையாக இருக்குமானால், இதுவொரு பாரிய குற்றமாகும். ஏனைய நாடுகளின் அரசாங்கங்கள் என்ன செய்கின்றன? பாகிஸ்தான், சீனா, அவை எவ்வாறு உதவி செய்கின்றன? அல்லது இந்தச் சூழலை எவ்வாறு பாழடிக்கின்றன?

இலங்கையின் இந்த நிலைமைகள் தமிழ்நாட்டில் தீவிர எழுச்சிக்குத் தூபமிட்டுள்ளன. இதனால் பத்துக்கு மேற்பட்டோர் தமக்குத் தாமே தீ மூட்டித் தற்கொலை செய்து கொண்டார்கள். பொதுமக்கள் கடும் கோபமும், கடுந்துயரும் கொண்டுள்ளனர். அவற்றுள் பெரும்பாலானவை அப்பழுக்கற்றவை. எனினும் சில எதிர்வரும் தேர்தலை அடிப்படையாகக் கொண்ட, எந்தப் பிரயோசனமுமற்ற அரசியல் மோசடிகள் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

ஏன் இந்த மௌனம் இங்கு தொடர்கிறது? ஆகக் குறைந்தது இந்த விடயத்தில், அங்கு வெள்ளைவான் கடத்தல்கள் இல்லையா? மேற்கூறப்பட்டது போலல்லாமல் இலங்கையில் என்ன நடக்கிறது? இந்த மௌனம் மன்னிக்கப்படக் கூடியதா? முதலில் ஒரு பக்கம் சாய்வதும், பின்னர் மறுபக்கம் சாய்வதுமான இந்திய அரசாங்கத்தின் இந்தப் பொறுப்பற்ற போக்குத் தொடர்கிறது.

எங்களில் பலர் நான் உட்பட, முன்னரே இதைப்பற்றிப் பேசியிருக்க வேண்டும். ஆனால் அப்படி நடக்கவில்லை. ஏனெனில், போரைப் பற்றிய தகவல்கள் போதாமலிருந்தது, படுகொலைகள் தொடர்ந்து கொண்டிருக்கும் போது, இனவதை முகாம்களில் பல்லாயிரக் கணக்கான மக்கள் அடைத்து வைக்கப்படுகிற போது, இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் பட்டினியால் மரணத்தை எதிர்நோக்கும் போது, ஒரு இனப்படுகொலை நடக்க இருக்கும் போது, ஒரு மாபெரும் தேசம் மரண அமைதி காக்கிறது. இது ஒரு மிகப்பிரமாண்டமான மனிதாயத் துயரம். உலகம் முன்னோக்கிப் பார்க்க வேண்டும். ஏற்கெனவே காலம் தாழ்த்தியாகி விட்டது.



மனோ

# இலங்கை வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் தமிழரா...? சிங்களவரா...? அரேபியரா...?

**"முஸ்லிம் அல்லாத நாட்டில் வாழும் முஸ்லிம்கள் ஐ.எஸ்.ஐ.எஸ் போன்ற வெளி அமைப்புகளுடன் சேர்ந்து உம்மத் அல் இஸ்லாம் என்கிற பெயரில் கலிஃபா உருவாக்கப் போராடுவதா? அல்லது தமது நாட்டைக் காக்க ஐ.எஸ்.ஐ.எஸ். போன்ற அந்நிய சக்திகளுக்கு எதிராகப் போராட ஊக்குவிக்க வேண்டுமா?"**

இதே சிந்தனையை வளர்க்கவே இஸ்லாமிய அரசியல் தலைவர்கள் தமிழ் அரசுக் கட்சியால் கிழக்கிலே அறிமுகப் படுத்தப்பட்ட மன்சூர் மௌலானா தமிழ்அரசுக் கட்சியிலிருந்து வெளியேறி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டார்.

திரு. அஸ்ரப் மட்டும் தமிழருடன் இணக்கமான அரசியலை முன்னெடுத்தார். அவரையும் சந்திரிகா தலைமையிலான அரசு விசித்திரமான முறையில் அகால மறைவு ஏற்படுத்தி, தனது சிங்கள இன மேலாதிக்க அரசியலை வெளிப்படுத்தியது.

இப்படித்தான் அமைதியை விரும்பும் இலங்கை மிதவாத முஸ்லிம்கள் என்னும் அமைப்பு, முஸ்லிம்களை நல்ல பிள்ளைகளாகக் காட்டிக் கொள்ள, ஐ.நா. தலைவர், ஐ.நா.மனித உரிமைகள் உயர் ஆணையாளர், ஸ்ரீலங்கா அரச அதிபர் மற்றும் பலரிடம் இலங்கை முஸ்லிம் மக்களைத் தவ்ஹத் ஜமாத் என கூறிக் கொள்ளும் இஸ்லாமிய மதத் தீவிரவாதிகளிடம் இருந்து காப்பாற்றும் படி கேட்டுள்ளது.

மேலும் உலக நிறுவனங்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் சமூகத்தில் புற்று நோய் போல விரைவாகப் பரவி வரும் இந்த அமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் சமூகம் இந்த நாட்டில் கடின உழைப்பால் பெற்ற அமைதியை முஸ்லிம் சமூகத்தினுள் உள்ள தீவிரவாதக் குழுக்கள் அழித்துவிட அனுமதிக்க வேண்டாம் எனக் கேட்டுள்ளது.

சுமார் 99 விகிதமான ஸ்ரீலங்கா முஸ்லிம்கள் சுன்னிகள், மீத மான 1% விகிதம்



நாங்க புட்டும் தேங்காய்ப் பூவுமாக இருந்தவங்க நல்லவங்க!

சியாக்கள். சுன்னிகளில் பெரும்பான்மையான 73% விகிதம் தப்லிக் ஜமாத், 10 % தவ்ஹித் ஜமாத், 8% ஜமாத் இஸ்லாம், 6% சுந்துல் வால் ஜமாத், 2% ஜமாத்துல் முஸ்லிமீன், மற்றும் 1% அகமதியர்கள் உள்ளார்கள் என மேலதிகமாக குறிப்பிட்டுள்ளது. இலங்கை முஸ்லிம் சனத் தொகையில் தவ்ஹித் ஜமாத் ஒரு சிறுபான்மையினரையே பிரதி நிதிப்படுத்துகிறது தெளிவாகிறது.

இந்தப் புள்ளி விபரங்கள் பற்றிய உண்மைத் தன்மை எமது விமர்சனம் அல்ல. அவர்கள் என்ன தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்? என்பதை தெரிவிக்கவே இங்கு அவற்றை இங்கு குறிப்பிடுகிறோம்.

சுன்னி முஸ்லிம்களில் முக்கால் வாசியை மட்டுமே தவ்ஹித் ஜமாத் பிரதிநிதிப்படுத்துகிறது என்பதைக் காணலாம். இலங்கையின் ஏனைய மதக் குழுக்களின் மத்தியில் அறியப்படாத அவர்கள் எந்த வித முரண்பாடுகளிலும் சீர் குலைப்புச் செயல்களிலும் தொடர்பு கொண்டிருக்கவில்லை.

இந்நாட்டின் முஸ்லிம் சனத் தொகையில் 17% வீதமான ஏனைய குழுக்களும், பொது ஊடகங்களிலும் கேள்விப்படாத எந்த வித முரண்பாடுகளிலும் தொடர்பு இல்லாதவர்களாகவே உள்ளனர்.

அமைதியை நேசிக்கும் பெரும்பான்மையான முஸ்லிம்கள், ஒரு சிறுபான்மையினரின் செயல்களுக்கு பொறுப்பு ஏற்கும் நிலை பரிதாபத்துக்கு உரியது. பாசமுள்ள அண்ணன் தம்பிகள் இன்று காத்தான் குடியைப் பற்றி ஒரு இஸ்லாமியரான வைத்திய கலாநிதி கூறுவதைப் பார்ப்போம்;-

“ஆரையம்பதி காத்தான் குடி என்கிற பகுதி, மட்டக்களப்பில் ஏறக்குறைய 100 சதவீதம் முஸ்லிம் குடியிருப்பாகும். அதன் பரப்பளவு 6 கி.மீ. நீளம், 2 கி.மீ. அகலம்தான். ஆனால் 50,000 வரையான மக்களால் நிரம்பி உள்ளது. அங்கே 60 வரையான பள்ளி வாசல்களும், அரை டசின் (6) பாடசாலைகளும், மருத்துவமனை, பெருந் தெருக்கள், குறுந் தெருக்கள் கொண்ட பொதுக் கட்டுமானங்களையும் கொண்டுள்ளது. விரிவாக்கம் என்றால் அடுக்கு மாடிகள் கொண்டு வானை நோக்கித்தான் இருக்க முடியும்.




அண்மைக் காலம் வரை இந்நகரத்தின் பெரும்பான்மையான மக்கள் விவசாயம், நடமாடும் தெரு வணிகம், சிறு வணிகம், சில்லறை வணிகம் செய்பவர்களாகவே இருந்தனர். காகமும் காத்தான்குடி மனிதரும் இல்லாத இடம் இலங்கையில் இல்லை என்கிற மக்களின் பேச்சு, அவர்களின் வணிகத் திறமைக்கு சான்று.

இன்று அங்குள்ள நிலை வேறு. குறிப்பாகச் சிங்கள மக்களிடையே வளர்ந்து வரும் போட்டி வணிக வகுப்பினரால், மற்றும் ஒரு குறைந்த அளவு சிறுபான்மைத் தமிழராலும், வரலாற்றில் வணிக சமூகமாக போற்றப்பட்ட முஸ்லிம் சமூகம் பொருளாதாரக் காரணங்களால் மாற்று வழிகளைத் தேட வேண்டிய கட்டாயம் பொதுவாக உள்ளது.

1970ன் பின்னர் காத்தான் குடியின் மதச் சூழல் மத்திய கிழக்குக்கு சிறப்பாக சவுதி அலேபியா போய் வேலை செய்பவர்களால் புதிய வேகம் பெற்றது. பக்தியும், தான தர்மமும் ஒன்றை ஒன்று தாங்கும் இலாப நோக்கு இணைந்த வளர்ச்சி கண்டது.

**சவுதியிலிருந்து திரும்பியவர்கள் தம்முடன் வாகாப் சிந்தனை பழக்கங்களையும் கொண்டு வந்தனர். அவர்கள் சூஃபாவையும், அதனோடு தொடர்பு கொண்ட சடங்குகள், சம்பிரதாயங்களையும் மறுதலித்தனர் அவர்கள் சூஃபா இஸ்லாத்தின் பிறழ்வாக திரிபாக வகைப்படுத்தினர். காத்தான் குடியும், மத்திய கிழக்கின் கிபாப்பும் தோப்பும் அணியும் இளைஞர் யுவதிகளின் ஆடையாகவும் மாறி, பரம்பரை ஆடையான சேலையும், துப்பட்டாவும், சாரமும் கைவிடப் பட்டன.**

**ஒரு புதிய அனுபவம் குறைந்த இமாம்கள் இசை, சினிமா போன்ற ஏனைய இன் கலைகளையும், சமூக விழாக்களையும் கண்டனம் செய்தனர். பேச்சுத் தமிழில் அராபிய சொற்கள் உயர் தட்டு மக்களிடையே அதிகளவு பயன்படுத்துவது போன்றவற்றால் உள்நாட்டு கலாச்சாரம், அரபுக் கலாச்சாரம் நோக்கிப் போவதை காட்டுகிறது.**

காத்தான் குடியைச் சேர்ந்த மௌலவி அப்துல் ரவூப் ஒரு பிரபலமான ஆலிமின் மகன். எம்.எஸ்.அப்துல் பயில்வான் மருத முனையின் அகில இலங்கை தாரிக் கதுல் மஃப்லிஹீன் தலைவர் ஆகிய 2 போதகர்களும் சூஃப் பிரிவு மதத்தில் அதன் பல வழக்கங்கள்




ImmoFinance
Suisse GmbH
Contact :
Selvaratnam Mathan
புதிய வீடுகள் கட்டுவதற்கான
ஆலோசனைகளுடன் அனைத்து சேவைகள்
வீடுகளை வாங்கவும், விற்கவும் உதிவிகள்,
ஆலோசனைகள்
சுவிசின் அனைத்து முன்னணி காப்புறுதி
நிறுவனங்களினூடாக காப்புறுதி
முன்னணி வங்கிகளினூடாக
வீட்டுக்கடன்
076 303 22 16
mathan@gmx.ch

நியாயமானவை என நம்பியவர்கள். காத்தான் குடியில் ரவுப் நீண்ட காலமாக மத முரண்பாடுகளுக்கு பெயர் பெற்றவர். ஆனால், பயில்வான் நீண்ட காலத்துக்குப் பின்னர் குறிப்பாக 1990க்குப் பின்னர் அவருடன் இணைந்தவர்.

2009க்குப் பின்னர் காத்தான் குடி ஒரு சிறு அராபிய நகரமாக மாறி விட்டது. பேரீச்சம் பழ மரங்கள், பெருந்தெரு முகப்பு வளைவில் கடைகளின் முகப்பில் அராபிய மொழியில் எழுதப்பட்ட அறிவித்தல்கள், காத்தான்குடியை குஹத்தான் குடி என பெயர் மாற்றம் செய்தது,

அதற்கு ஆதாரமாக ஏமன் நாட்டில் உள்ள **குஹட்டன்** என்ற இடத்தில் இருந்து முதலில் வந்து குடியேறியவர்களின்; சந்ததி என்கிற சரித்திர சான்றுகள் இல்லாத காரணத்தைக் கூறிக் கொண்டார்கள். பின்னர் இதனைச் சவுதியின் பணக்காரக் **குஹூத்தான்** என்கிற குடும்பத்தின் பணத்தை பெறும் முயற்சி எனவும் கூறப்பட்டது.

முஸ்லிம் அல்லாத நாட்டில் வாழும் முஸ்லிம்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். போன்ற வெளி அமைப்புகளுடன் சேர்ந்து உம்மத் அல் இஸ்லாம் என்கிற பெயரில் கலிஃபா உருவாக்கப் போராடுவதா? அல்லது தமது நாட்டைக் காக்க ஐ.எஸ்.ஐ.எஸ். போன்ற அந்நிய சக்திகளுக்கு எதிராகப் போராட ஊக்கு விக்க வேண்டுமா?

இலங்கையின் 90விகிதமான முஸ்லிம் சமூகம் இந்த நாட்டில் முரண்பாடுகள் மற்றும் பிரிவினை நடவடிக்கைகள் மூலம் இந்த நாட்டின் அமைதி இன்மைக்கும், ஒற்றுமை இன்மை மற்றும் நம்பிக்கை இன்மை போன்றவற்றுக்கு எந்த வகையிலும் தொடர்பு அற்றவர்கள் என்பதை இது காட்டுகிறது.

இக்கேள்விக்கான விடையை தமிழர் தரப்பின் தலைவர் சம்பந்தனும், கிழக்கு மாகாசபை ஆளுநராகப் பதவி ஏற்றுள்ள ஹிஸ்புல்லாவும் காண முற்படுவார்களா? முஸ்லிம் மக்கள் தாம் தமிழர் அல்ல என்கிற நிலையை எடுத்தால், அவர்களை அரேபியர் என தமிழர் தரப்பு ஏற்க வேண்டுமா?






# உயிர்த்த ஞாயிறு தாக்குதலும் அதன் தாக்கமும்

**சிவா பரமேஸ்வரன்**
மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்

"பதவிக்காக மற்றொரு வரை அழிக்கும் முயற்சிகளை கைவிட்டு, புத்தபிரான் கற்பித்தது போல், மட்டற்ற சமானதானத்தை நாம் அனைவரும் முன்னெடுக்க வேண்டும்" என்று பௌத்தர்களுக்கு மிகவும் புனிதமாகக் கருதப்படும் வெசாக் தினத்துக்கான தனது செய்தியில் நாட்டின் அதிபர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். மேலும் "வெறுப்பின் மூலம் வெறுப்புணர்வைத் தணிக்க முடியாது, அன்பின் மூலமே அதைத் தணிக்க முடியும்" என்றும் அவரது செய்தி கூறுகிறது.

ஆனால், சொல்லுக்கும் செயலுக்கும் எவ்வளவு வித்தியாசம் உள்ளது? என்பதை நாடறியும். புத்தபிரான் கூறியதைக் கேட்டிருந்தால் நாட்டில் கலவரங்களும், உள்நாட்டு யுத்தமும், படுகொலைகளும், இன முரண்பாடுகளும், அமைதியற்ற சூழலும் ஏற்பட்டிருக்காது.

இன்று இலங்கையிலுள்ள சிறுபான்மையின மக்கள் பேய்க்கும், பெருங்கடலுக்கும் இடையே சிக்கித் தவிக்கின்றனர். உயிர்த்த ஞாயிறன்று நாட்டின் பல இடங்களில் நடைபெற்ற தொடர் குண்டு வெடிப்புகளும், தற்கொலைத் தாக்குதல்களும் மக்களை அச்சமும், கவலையும் அடையச் செய்துள்ளன.

உள்நாட்டுப் போர் முடிந்து பத்தாண்டுகள் ஆகும் நிலையிலும், போரின் போது நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுகள் தொடர்பில் யாதொரு தீர்வும் கிட்டாத நிலையிலும், நாட்டில் 'அமைதியும் சமாதானும் நிலவுகிறது' என்று தொடர்ச்சியாக வந்த அரசுகள் கூறிவந்த நிலையில் இந்தப் படுகொலைகள் நடந்துள்ளன.

உயிர்த்த ஞாயிறு படுகொலைகளை அடுத்து நாட்டில் மீண்டும் கெடுபிடிகள் அதிகரித்தன. நெருக்கடி நிலை அமல்படுத்தப் பட்டது. சோதனைச் சாவடிகள் அதிகரித்தன. தேவாலயங்கள் மீதான தாக்குதல்களை கிறிஸ்தவத்தின் மீதான தாக்குதலகாவே மேற்குலக நாடுகள் பார்க்கும். அதன் தாக்கம்

# IMPORTAS
Cash & Carry

தாயக உணவு வகைகள் உட்பட அனைத்து உணவு
வகைகளையும் உயர் தரத்தில் மிக மலிவாகவும்
நீங்கள் நம்பிக்கையோடு நாட வேண்டிய ஒரே இடம்...



## பேர்ண் நகரில்
# புதிய உதயம்

வாடிக்கையாளர்களின் ஏகோபித்த
வேண்டுகோளுக்கிணங்க 30 வருடங்களாக
தமிழர்களின் அபிமானம் வென்ற
"இம்போட்தாஸ்" நிறுவனம் பேர்ண் மாநகரில்
தனது கிளையை திறந்து வைக்கின்றது

**Kranichweg 8, 3074**
**Muri Bei Bern**
**☎ 031 951 24 44**

Subash · Rubicon · Renuté · PG tips · Patak's · Niru · Nestlé · Maggi · Kings · Gits · Elakkia · TRS · Thai Pride · Suryaa

Baslerstrasse 102, 8048 Zürich - Switzerland
Tel : +41 43 343 03 55 Fax : +41 43 343 03 56
email : info@importas.ch Web : www.importas.ch

சிறுபான்மை மக்கள் மீதே அதிகமான இருக்கும் என்பதிலும் ஐயமில்லை.

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையேயான அதிகாரப் போட்டியில் நாடு சிக்கித் தவிக்கிறது. ஜனாதிபதி நாட்டில் இல்லாத போது பாதுகாப்பு சபையைக் கூட்ட பிரதமருக்கு அதிகாரமில்லை. தேசிய நல்லாட்சி அரசு என்று தன்னைக் கூறிக் கொள்ளும் அரசில் பாதுகாப்பு அமைச்சும், சட்டம் ஒழுங்கு அமைச்சும் ஜனாதிபதியிடமே உள்ளது. அப்படியிருந்தும், தாக்குதல்கள் குறித்த புலனாய்வுத் தகவல்கள் தனக்கு கிடைக்கவில்லை என்று ஜனாதிபதி கூறியுள்ளது எவ்வளவு பெரிய முரண்நகை.

நடைபெற்ற தாக்குதல்களில் உயிரிழந்தவர்களில் தமிழர்கள் ஏராளம் என்பது ஏன் பெரிதாகப் பேசப்படவில்லை? நூறு வீதம் தமிழர்கள் வாழும் மட்டக் களப்பிலுள்ள சீயோன் தேவாலயத்தில் மட்டும் 29 தமிழர்கள் பலியாயினர். கிழக்கு மாகாணத் தமிழர்களுக்கு சவால் விடுவதாகவும், அவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலேயே மட்டக்களப்புத் தாக்குதல் நடைபெற்றுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தை முஸ்லிம்கள் தம்முடைய மாகாணம், தொடர்புபட்ட நிலப்பரப்பும், முஸ்லிம்கள் தனித்துவமாக வசிக்கும் பகுதிகளை உள்ளடக்கிய ஒரு பிரதேசமும் தமக்கு தேவை என்பது காலஞ்சென்ற அஷ்ரஃப் அவர்களின் காலத்திலிருந்தே எழுந்த கோரிக்கையாகும்.

இந்நிலையில் போர்ச் சூழல் எனும் போர்வையில், பேரினவாத சக்திகள் தமிழ் மக்களுக்கு எதிரான தமது நிலைப்பாட்டில் வெற்றிபெற முஸ்லிம்களும் இணக்கமாக இருந்தனர். இதன் பின்புலத்திலேயே காத்தான்குடியின் வளர்ச்சியைக் காண வேண்டும். காத்தான்குடி பிரச்சினையை முளையிலேயே கிள்ளியிருக்க வேண்டும்,

நாட்டில் அதிகாரபூர்வமாக மும்மொழிக் கொள்கை இருக்கும் போது, காத்தான்குடியின் நுழைவுவாயிலில் அரபு மொழியில் எழுதுவதற்கு அனுமதிக்கப்




PALAZIO

EVENTS

உங்கள் இல்லத்தின்
சகல விதமான மங்கல வைபவங்களை
உங்கள் விருப்பத்திற்கேற்ப அனைத்து சேவைகளுடனும்
ஒரே இடத்தில் கொண்ட ஓர் அழகிய மண்டபம்.

0-100 மற்றும் 0-700 விருந்தினர்கள் வரை அமரக்கூடிய வாகனத் தரிப்பிட வசதிகளுடனும் கூடியது.



**மேலும் எம்மிடம்....**

மாலைகள், ஐயர், தவில் – நாதஸ்வரக் கச்சேரி, போட்டோ – வீடியோ,
பாட்டுக் கச்சேரி, நடனம், தங்கு விடுதி,
மணமகள் அலங்காரம், மேடை அலங்காரம், சொகுசு வாகன வசதி,
Limousine Car மற்றும்
பல தேவைகளும் ஒழுங்கு செய்து தரப்படும்.

+ (49) 1525 3961138 Kasinostr. 25 |42103 Wuppertal

# PAGEVISION

Tel: 043 317 91 00, Fax: 043 317 91 02

**www.pagevision.ch**

உங்கள் கணினிசார் அனைத்து விதமான தேவைகளுக்கும் தயக்கமின்றி எம்மை நாடுங்கள்



ATX Standard Tower, 2x USB Front Anschluss, in 5 Farbvariationen erhältlich
Intel Pentium G4400, 2x 3.30GHz, Dual Core, 3MB Cache
Intel H110 Chipsatz, Gigabyte GA-H110M-DS2 Mainboard
8GB DDR4 Ram, Markenprodukt, 2133MHz
120GB SSD Laufwerk, 550MB/s lesen - 350MB/s schreiben
22x DVD-Brenner +/-/RAM Dual Layer
Kartenleser für alle Formate
8-Kanal Sound für Surround Systeme
10/100/1000Mbit Netzwerkanschluss für Netzwerke und Breitband-Internet
Windows 10 installiert und konfiguriert, inkl. DVD und Lizenz
21.5" Breitbild-Flachbildschirm, 5ms, integrierte Lautsprecher
kabellose Maus (optisch) und Tastatur

## PC Systems

**CHF 695.- inkl. MwSt**



AMD E-450 Dual Core Prozessor, 2x 1.66GHz
4GB DDR-3 RAM, Markenprodukt
400GB Festplatte, 8MB Cache, 5400RpM
DVD-Brenner Laufwerk, ±R/±RW/Dual Layer
AMD® A50M FCH Chipsatz
15.6" HD LED Display, spiegelnd, Auflösung 1366 x 768
ATI Radeon HD6310 Grafik integriert, bis 1469MB dynamisch
10/100Mbit Netzwerkkarte
integriertes Mikrofon und Lautsprecher
Gewicht 2.3kg inkl. Akku
300Mbit WLAN, UMTS optional
Schweizer Tastatur inkl. 10er Zahlenblock
374 x 250 x 14.3-34.1mm
Netzteil, Akku (Laufzeit 3-4.5h)
Windows 7 Home Premium, installiert und Konfiguriert, inkl. DVD und Lizenz

## Note Books

**CHF 499.- inkl. MwSt.**

## Reparaturen Aller Marken

**Sehr Schnelle Lieferung!**
**Hauslieferungen**
**Vor-Ort Installationen**
**Netzwerklösungen für Firmen**
**Reparaturen aller Marken!**

## iPhone Reparaturen

**www.iphonefan.ch**

günstige gebrauchte Computer
Reparaturen aller Marken

**www.pckaufen.ch**

Tellstr.31, 8004 Zürich - Tel : 043 317 9101
Kirchgasse 33, 8302 Kloten - Tel : 044 500 22 22
Züricherstr. 99, 8406 Winterthur - Tel : 052 203 15 50
Rosengartenstrasse 4-8037 Zürich - Tel : 044 271 00 07

பட்டது அல்லது கண்டுகொள்ளாமல் விடப்பட்டது போன்றவை, இஸ்லாமிய அடிப்படைவாதம் வேரூன்றி வளர்வதற்கு வழி செய்தன. அதன் பலனை இன்று இலங்கை அனுபவித்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

போர் காலச் சூழலைப் பயன்படுத்தி, தமிழ் மக்களுடைய காணிகள் பல்தரப்பால் அபகரிக்கப்பட்டு, அவை இன்றளவு முழுமையாக மக்களுக்கு மீண்டும் கையளிக்கப்படவில்லை. தமிழர் பகுதிகளில், குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் காணிப் பிரச்சினைகள், அதிகாரப் பிரச்சினைகள் தொடருகின்றன. அந்த உரசல்களை மேலும் அதிகரித்து, சிறுபான்மையினர் மோதலில் 'பாதுகாவலர்கள்' குளிர் காயும் அபயாம் உள்ளது.

இலங்கை மீது பன்னாட்டு நெருக்கடிகள் அதிகரிக்குமாயின், அது சிறுபான்மை மக்களையே பெரிதும் பாதிக்கும். அப்படியான சூழலில், இஸ்லாமிய நாடுகள் முஸ்லிம் மக்களுக்கு உதவத் தவறாது. ஆனால், தமிழ் மக்களின் நிலை என்னவாகும்? என்பது விடை தெரியாத வினாவாக உள்ளது. அவர்களின் நிலை மத்தளம் போலாகிவிடும்.

இன்றையத் தலைமுறைனர் பலர் சில வரலாற்று உண்மைகளை அறிந்திருக்காமல் இருக்கும் வாய்ப்பு உள்ளது. இலங்கை வரலாற்றில் நடைபெற்ற முதலாவது இனக் கலவரம் பௌத்த-முஸ்லிம் மக்களிடையே 1915ஆம் ஆண்டு நடைபெற்ற கலவரமேயாகும். அந்த ஆண்டு மே 28 அன்று, கண்டியில் தொடங்கிய அது பின்னர் அடுத்த இரு நாட்களில் கொழும்பு, சிலாபம் என நாட்டின் பலப் பகுதிகளுக்குப் பரவியது. இதில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர். பெரஹர ஊர்வலங்கள், பள்ளிவாசல்கள் வழியே செல்ல முஸ்லிம்கள் எதிர்ப்புத் தெரிவிக்க, உயர்நீதிமன்றம் வரை சென்றது பிரச்சினை. எனினும் கண்டி உடன்பாட்டின்படி பெரும்பான்மையின மக்கள் நடந்துகொள்ள மறுத்ததால் கலவரம் வெடித்து, உயிரிழப்புகள் ஏற்பட்டன என்று ஆவணங்கள் கூறுகின்றன.

எனவே, கடந்த நூறு வருடங்களாகவே இலங்கையில் ஏதோ ஒரு வகையில் சகிப்புத் தன்மையும், மத


Dortmund மாநகரில்....

தமிழர் அரங்கம் கல்விக் கூடம்




யேர்மன் மொழி வகுப்புகள்

அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப் படுகிறது. யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்பு



Nachhilfe வகுப்புகள்

பாடசாலை மாணவர்களுக்கானது



தமிழ் மொழி வகுப்புகள்

தமிழ் மொழி வகுப்புகளுக்கு கட்டணம் இல்லை



பரதநாட்டிய வகுப்புகள்

டோட்முண்ட மற்றும் ஒபகவுசினில் நடைபெறுகின்றன

Rheinische Str 76-80, 44137 Dortmund

0151 633 633 33
0231 950 979 00

நல்லிணக்கமும் நிலவவில்லை என்பது சரித்திர ரீதியாகத் தெரிகிறது. அதேபோல் இலங்கையில் நடத்தப்பட்ட முதல் அரசியல் கொலை என்று கூறப்படும் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவின் கொலையும், பௌத்த குரு ஒருவராலேயே நடத்தப்பட்டது.

இப்படியானதொரு பின்புலத்தில் அண்மையில் நடைபெற்ற கலவரங்களுடன் கருப்பு யூலை கலவரங்களை ஒப்பிட்டுப் பேசும் பேதமையையும் காண முடிகிறது. இது அரசியல் மற்றும் சமகால நடப்புகளின் புரிதல் இன்மையைக் காட்டுவதாகவே கருத வேண்டியுள்ளது. மேலும், தமிழ் மக்களின் இனவிடுதலைப் போராட்ட காலத்தில் காலூன்ற ஆரம்பித்த முஸ்லிம் அடிப்படைவாதம் வலுபெறும் வகையில் அதை பேரினவாத கட்சிகள் ஆதரித்தன என்பது கசப்பான வரலாற்று உண்மை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களும், அதன் பின்னரான நிகழ்வுகளையும் கூர்ந்து கவனிக்கும் போது, அந்தப் பயங்கரவாதச் செயலை அரசியல் ஆதாயத்துக்கு பயன்படுத்திக் கொள்ள காட்டப்படும் முனைப்பு தெரிகிறது.

நாட்டின் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார். பௌத்த சித்தாந்தங்களை மிகவும் நேசிப்பதாக அவர் தொடர்ந்து கூறி வந்துள்ளார். இது பெரும்பான்மையின மக்களுக்கு நேரடியாகவே விடுக்கும் செய்தியாகவே உள்ளது என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல் மற்றும் கலவரத்தைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் சிறுபான்மை மக்களின் அல்லது சிறுபான்மை கட்சிகளின் ஆதரவு இன்றி ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற பெரும்பான்மையைப் பெற வேண்டும் என்ற நிலைப்பாடு பௌத்த பேரினவாத சக்திகளிடையே விரிவடைந்து வருவதான கவலைகள் உள்நாடு மற்றும் வெளிநாட்டில் நிலவுகிறது.


# ஈழத்தமிழருக்கான உதயம்...!

ஈழத்தின் மூலைமுடுக்கெங்கும் ஏதோவொரு விதத்தில் இயலாமையும், இன்மையும் இருக்கின்றன. எல்லோரது தேவையையும் ஒரேநொடியில் நிறைவேற்றிவிட இயலாதெனினும், அதற்காக முயற்சி செய்வதாவது ஒரு நிறைவைத் தருமல்லவா?. அவ்வாறே யேர்மனியில் ஒரு சிறு முயற்சியைத் தொடங்கிய ‘உதயம் தன்னார்வத் தொண்டு நிறுவனம்’, இன்றுவரை ஏராளமான குடும்பங்கள், வலுவிழந்தோர் மற்றும் முன்னாள் போராளிகள் என பலதரப்பட்ட மக்களுக்கான வாழ்வாதார அடிப்படையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. உயிர் வாழும் காலத்தில் எம்மால் முடிந்தவரையில், எம்மினத்தின் உயர்வுக்காக உழைப்பது, ஒவ்வொரு தமிழரதும் கடமையாகும். உதயம் தொண்டு நிறுவனத்தின் பணியாளர்கள் அதை சிரமேற் பணியாகக் கொண்டு இயங்குகிறார்கள். புலத்தில் வாழ்கின்ற தமிழர்கள் அனைவரும் உதயம் தொண்டுநிறுவனத்திற்குக் கைகொடுத்து உதவுவது காலத்தின் அவசியமாகும்.

உதயத்தின் தொடர்புகளுக்கு : *(www.uthayamhilfe.de)* *uthayamhilfe@hotmail.com*

Uthayam SONNENSCHEIN
உதயம்
Hilfe für notleidende Menschen






CENTURY
TRAVELS GMBH

Emirates Sommer 2018

# SRILANKA -COLOMBO

**Direct Booking Nr.: 017621682149**

## ஜேர்மனியில் இருந்து கொழும்புக்கான சிறப்பு பயணச் சலுகை

## 2019ம் ஆண்டின் கோடைகால முன்பதிவுகள் ஆரம்பம்

# Juli-2019 ab599€



**அங்கத்தவர்களாக இணையும் வர்த்தகர்களுக்கு விசேட சலுகை (வி.ஐ.பி) உண்டு.**

**தொடர்புக்கு 0176 216 82 149**

(Gültig nur mit gewerbe ammeldung)

**Ram Nishanthan Dip. T.T.Mgt-IATA/UFTAA Montreal**

web : www.centurydravels.de email : info@centurytravels.de


## ஒருவருட Lebara Play அன்பளிப்பு

5 விமானச் சீட்டுகள் வாங்கினால்
ஒரு வருட Lebara Play நீடிப்பு (Renewal)
கூப்பன் அன்பளிப்பாக வழங்கப்படும்

**Niederlassung**
Rheinische Str. 29
44137 Dortmund
Tel.: 0231 55 74 319
0231 58 96 557
0201 64888225
Fax : 0231 58 44 665

**Hauptsitz**
Steeler Str. 150
45139 Essen
Tel.: 0201 64 888 225

திங்கள் முதல் வெள்ளி வரை
காலை 9.30 முதல்
மாலை 3:30 திறந்திருக்கும்


LIMRA BAGS PVT. LTD.
No.14A, Pensioner st, Tennur, Trichy - 620 017, TAMILNADU INDIA.
www.limrabags.in | 97861 14635 | 1800 121 123455
Lezer
For everyone of the world
Managing Director
Sadik Basha. M
தமிழ் இலக்கிய ஆர்வலர்